உ

சிவமயம்

கோவிலூர் மடாலயத்தில் எட்டாவது பட்டத்தில்
ஞானசிரியராக எழுந்தருளியிருந்த

# ஸ்ரீலஸ்ரீ
# சோமசுந்தர ஞானதேசிகரவர்கள்
# சரித்திரச் சுருக்கம்
## (தோத்திரப் பாடல்களுடன்)

★

இது மேற்படி ஞான தேசிகரவர்களின் முதல் மாணக்கர்
தவத்திரு
சோம. இராமலிங்க சுவாமிகளவர்களால்
எழுதப்பெற்று
கருப்பக்கிளர்
திரு. சு. அ. இராமசாமிப் புலவரவர்களால்
சரிபார்க்கப் பெற்று

காரைக்குடி
உயர்திரு. சுப. சிதம்பரஞ்செட்டியாரவர்கள்
பொருளுதவியால்
ஷை இராமலிங்க சுவாமிகளவர்களால் பதிப்பித்து
வெளியிடப்பெற்றது.
1972

உ

சிவமயம்

கோவிலூர் மடாலயத்தில் எட்டாவது பட்டத்தில்
ஞானசிரியராக எழுந்தருளியிருந்த

ஸ்ரீலஸ்ரீ

# சோமசுந்தர ஞானதேசிகரவர்கள் சரித்திரச் சுருக்கம்

## (தோத்திரப் பாடல்களுடன்)

★

இது மேற்படி ஞான தேசிகரவர்களின் முதல் மாணாக்கர்

தவத்திரு.
சோம. இராமலிங்க சுவாமிகளவர்களால்
எழுதப்பெற்று

கருப்பக்கிளர்
திரு. சு. அ. இராமசாமிப் புலவரவர்களால்
சரிபார்க்கப்பெற்று

காரைக்குடி
உயர்திரு. சுப. சிதம்பரஞ் செட்டியாரவர்கள்
பொருளுதவியால்

ஷை இராமலிங்க சுவாமிகளவர்களால் பதிப்பித்து
வெளியிடப்பெற்றது.

1972

முதற் பதிப்பு 1972

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானதேசிகரவர்கள்
சரித்திரச் சுருக்கம்

அப்பர் அச்சகம், சென்னை-1.

# முகவுரை

எந்நாட்டினுஞ் சிறந்து விளங்குவது நம் தென்னுடாகிய தமிழ்நாடாம். தமிழ்நாட்டின் கண் வேதாந்த பரம்பரையை நிலைநாட்டியது கோவிலூராதீனமேயாம் என்பது யாவரும் நன்குணர்ந்த ஒன்ருகும். இவ்வாதீனத்தில் இப்பொழுது குருமூர்த்திகளாக எழுந்தருளியுள்ளவர்கட்கு முன்னுல் கோயிலூராண்டவர் என்னும் ஸ்ரீலஸ்ரீ முத்துராமலிங்கஞான தேசிகரை முதலாகக்கொண்டு எண்மர் ஞானுசிரியர்களாக எழுந்தருளியிருந்தனர். இவர்களில் எட்டாவதாக எழுந்தருளியிருந்த ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞான தேசிக சுவாமிகளவர்கள் அடியேனுடைய குருமூர்த்திகளாவர். சென்ற ஆண்டில் விதேக கைவல்லியமடைந்த அவர்களுடைய வரலாற்றை முதலாண்டு நிறைவில் வெளியிடக் கருதி அறிந்தார் வாயிலாகக்கேட்டும் அடியேன் அறிந்தவைகளைக்கொண்டும் ஒருவாறு இவ்வரலாற்றை எழுதிமுடித்தேன். இதனைச் சரிபார்த்துத்தந்த கருப்பக்கிளர் திரு. சு. அ. இராமசாமிப் புலவர் அவர்கட்கும் அச்சிட்டு வெளியிடப் பொருளுதவிபுரிந்த காரைக்குடி உயர்திரு. சுப. சிதம்பரஞ் செட்டியாரவர்கட்கும் அடியேனுடைய நன்றி உரியதாகுக.

சோம. இராமலிங்க சுவாமி.

# பொருளடக்கம்



கோவிலூர், மடாலயத்தில் எட்டாவது
ஞாநசிரியராக எழுந்தருளியிருந்த
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானதேசிக
சுவாமிகள் அவர்கள்

தோற்றம் : 1890 மறைவு : 1971

உ
சிவமயம்
சற்குருநாதன் துணை

கோவிலூர் மடாலயத்தில் எட்டாவது
ஞானசிரியராக எழுந்தருளியிருந்த
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானதேசிகரவர்கள்

# சரித்திரச் சுருக்கம்

---

## காப்பு

ஐந்து கரத்தனை ஆறு முகத்தனை
இந்து சிரத்தனை இமயப் பாவையைச்
சிந்தையில் இருத்தியே சீர்திகழ் நங்குரு
வந்தருள் சரிதையை வரைகு வரமரோ.

### பாண்டிநாடு

திருவாதவூரடிகளாகிய மாணிக்கவாசக சுவாமிகளால்: "தென்னா டுடைய சிவனே போற்றி" என்று பாராட்டிப் போற்றப்பெற்ற நமது தென்னாட்டின்கண்ணே பாண்டி வளநாடு எல்லா வகையான சிறப்புக்களாலும் இனிது சிறந்து விளங்குகின்றது. இந்நாட்டின்கண்ணே தேவாரப் பாடல்கள் பெற்ற பதினான்கு சிவத்தலங்கள் சிறந்து விளங்குகின்றன. செஞ்சடைக் கடவுள் எண்ணெண் டிருவிளையாடல்களை இனிதியற்றிய மதுரை மாநகர், திக்கெலாம் புகழுந் திருநெல்வேலி, திருத் தேவை என்னும் இராமேசுவரம் முதலிய சிவப்பதிகள்

இந்நாட்டிற் பெரும்புகழ் பெற்றனவாம். ஓதுவார் உள்ளத்தை அழலிடு வெண்ணெயென உருக்குவதாகிய திருவாசகமென்னுந் தெய்வீகத் திருப்பனுவலைத் திருவாய் மலர்ந்தருளிய திருவாதவூரடிகளும் இப்பாண்டிநாட் டகத்தேயுள்ள திருவாதவூரில்தான் திருவவதாரஞ் செய் தருளினார்கள். மற்றும் இப்பாண்டிநாட்டின் பெருமைகள் பலவாம்; அவை விரிப்பிற் பெருகும் ஆதலின் ஈண்டு விரியாது விடுத்தாம்.

### செட்டிநாடு

இப்பாண்டி நாட்டின் கிழக்குப் பகுதியில் செட்டிநாடு சிறந்து விளங்குகின்றது. தனவணிகர்களாகிய செட்டி யார்கள் அந்நாளில் சோழவள நாட்டில் காவிரிப்பூம்பட்டி னத்தில் வசித்திருந்தார்கள். நாளடைவில் அவர்கள் தொகை பெருகியதால் பாண்டிய மன்னர்கள் வேண்டு கோட்கிணங்கிப் பாண்டிவளநாட்டிற் குடியேறினார்கள். அவர்கள் குடியேறிப் பெருகிய ஊர்களின் தொகை தொண்ணூற்ருறு வரை வளர்ந்தது. அவ்வூர்களே நாளடைவில் தொண்ணூற்ருறூர் என்று வழங்கலாயின.

### பள்ளத்தூர்

அத்தொண்ணூற்ருறூர்களில் பள்ளத்தூர் என்பது ஒன்று. இவ்வூரைச் சுற்றி நான்கு பக்கங்களினுமுள்ள இடங்களும் ஊர்களும் மேடாக இருக்க இவ்வூர் பள்ளமான இடத்தில் அமைந்தபடியால் பள்ளத்தூர் என்று காரணப்பெயர் பெற்றது. இப்பள்ளத்தூருக்குக் கிழக்கே வீரவனம் என்னுஞ் சாக்கோட்டையும் தெற்கே கோட்டையூர் காரைக்குடி முதலியனவும், மேற்கே சமிவனக்ஷேத்திரம் என்னும் கோயிலூர் குன்றக்குடி

வடக்கே திருமயம் ஆகிய தலங்களும் அமைய இப்பள்ளத்தூர் நடுநாயகமாக விளங்குகிறது.

தாய்தந்தையர்

இப்பள்ளத்தூரின்கண்ணே தனவணிக மரபில் தோன்றியவராகிய இராமநாதன் செட்டியார் என்பவர் வாழ்ந்திருந்தார். இச்செட்டியார் கல்வியறிவிலும் நல்லொழுக்கத்திலுஞ் சிறந்தவர். ஈசுவர பக்தியும் இச்செட்டியாரிடத்தில் நன்கு அமைந்திருந்தது. ''இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும், நல்லாற்றினின்ற துணை'' என்னுந் தெய்வப் புலவர் திருவாக்கிற்கேற்ப நடந்து சிறந்து விளங்கினர். இவருக்கு வாழ்க்கைத் துணைவியாக அமைந்த மாது நல்லாளின் பெயர் மெய்யம்மையாச்சி. இவ்வம்மையார், ''தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற, சொற்காத்துச் சோர்விலாள் பெண்'' என்னுந் திருக்குறளுக்கோர் இலக்கியமாக அமைந்து நின்று கணவருடன் இல்வாழ்க்கையை இனிது நடத்தியிருந்தார். கணவனும் மனைவியும் நன்மக்கட் பேறருள வேண்டுமென நாளும் தம் குலப் பெருங்கடவுளாகிய இளையாத்தன்குடி இறைவனையும் இறைவியையும் போற்றிக்கொண்டிருந்தனர்.

சுவாமிகள் தோற்றம்

இராமநாதன் செட்டியாரும் மெய்யம்மையாச்சியும் நன்மக்கட்பேறு கருதி இறைவழிபாடு செய்து நாளும் நல்லறங்களைச் செய்துகொண்டிருந்தது வீண்போகவில்லை. கலியுகம் 4990க்குச் சரியான விரோதியாண்டு மாசித்திங்கள் 30ஆம் நாள் (ஆங்கிலம் 1890 மார்ச்சு மாதம் 12ஆம் நாள்) புதன்கிழமை சஷ்டி திதியும் அஸ்த

நட்சத்திரமுங்கூடிய நன்னாளில் காலை $2\frac{1}{2}$ நாழிகைக்கு நமது சுவாமிகள் இவ்வுலகில் தோன்றியருளினார்கள். "மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன், நன்கலம் நன் மக்கட் பேறு" என்பதற்கேற்ப மக்கட் செல்வத்தை யடைந்த தாய்தந்தையர்கள் மகிழ்ச்சிக் கடலில் திளைத்துச் செய்யவேண்டிய தான தருமங்களைக் குறைவறச் செய்தனர்.

கல்வி கற்பித்தல்

அரும்பெறற் புதல்வராகத் தோன்றிய அடிகளார்க்கு, *'சோமசுந்தரம்', என்னும் இறைவன் திருப்பெயரையிட்டு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்துவந்தனர். சுவாமிகளும் வளர்ந்து ஐந்து வயதையடைந்தார்கள். "ஐயாண்டளவிலே மையேடு கைப்பிடி" என்பது முன்னோர் உரை. இதன்பொருள் சிறுவர்கட்கு வயது ஐந்து நிரம்பியவுடன் கல்வி கற்பிக்கத் தொடங்கவேண்டுமென்பதாம். செட்டியாரும் தம்முடைய புதல்வராகிய நம்முடைய சுவாமிகட்குக் கல்விப்பயிற்சி செய்விக்க எண்ணி நன்னாளில் நல்லோரையில் எழுத்தறிவிக்கும் விழாவையும் நடத்திக் கல்விகற்கச் செய்தனர். நம்முடைய சுவாமிகள் அக்கால முறைப்படி கல்வியை நன்கு கற்றுத் தேறினார்கள். அந்நாளில் பள்ளிகளில் ஆங்கிலங் கற்பிக்கும் வழக்கம் தோன்றவில்லை. ஆயினும் நம் சுவாமிகளுடைய தந்தையார் தம் மகன் ஆங்கில அறிவும் பெறவேண்டுமென்று கருதி ஆங்கிலக் கல்வியையுந் தக்கவர்களைக்கொண்டு கற்பிக்கச் செய்தனர். இதனால் நம் சுவாமிகள் தமிழையேயன்றி

* *முதலில் இடப்பட்ட பிள்ளைப்பெயர் நாகப்பன் என்றும் பிறகு புதுப்பெயர் உண்டாயிற்றென்றுந் தெரிகிறது.*

ஆங்கிலத்தையும் ஓதியுணர்ந்து வெளிநாடுகட்குச் சென்ருல் அவ்வவ்விடங்களில் சமயத்திற்குத் தக்கவாறு உரையாடும் ஆற்றலையும் அடைந்தார்கள்.

திரவியங்தேடல்

''திரைகடலோடியுந் திரவியந்தேடு'' என்பது ஔவைப் பிராட்டியார் அருள்மொழி. இதன்பொருள் 'அலைவீசுங் கடலைத் தாண்டிச்சென்றும் பொருளைத் தேடுவாயாக' என்பதாம். பொருளின் பெருமை புகலுதற் கரியது. எக்காரியத்தைச் சாதிக்கவேண்டுமாயினும் அதற்குப் பொருள் இன்றியமையாததாம்; இதனைக் கருதியே, ''முனிவருந் தேவரும் முன்னுவபொன்ஞல் முடியும்'' எனவும், ''பொருளிலார்க் கிவ்வுலகமில்லை'' யெனவும் பெரியோர்கள் கூறியிருக்கின்றனர். இராமநாதன் செட்டியார் தம்முடைய புதல்வர் திரைகடலோடியுந் திரவியந்தேட வேண்டுமென்று எண்ணினுர். வாணிகத்தின் பொருட்டுச் செல்வார்களோடு தம் புதல்வராகிய நம் சுவாமிகளையும் பொருள் தேடுதற்குக் கோலாலம்பூர் முதலிய இடங்கட்கு அனுப்பிவைத்தார். சுவாமிகளும் அவ்வாறே சென்று சில ஆண்டுகள் தங்கிப் பொருள் தேடித் திரும்பினுர்கள்.

திருமணம்

இராமநாதன் செட்டியாரும் அவருடைய மனைவியாரும் தம் புதல்வர்க்குத் திருமணஞ் செய்வித்து அக்கோலத்தைக் கண்ணுற் காணவேண்டுமென்று விரும்பினர். தங்களுடைய நோக்கத்தைப் புதல்வரிடமுந் தெரிவித்தனர். எல்லாம் நாடகமே என்பதை நன்குணர்ந்திருந்த நம் சுவாமிகள் தாய்தந்தையர்களுடைய

மனம் வருந்தக்கூடாதென்று எண்ணித் தம்முடைய உடன்பாட்டைத் தெரிவித்தார்கள். கொத்தமங்கலத்தைச் சேர்ந்த இலக்குமிபுரத்தில் திருமணப் பெண்ணை முடிவுசெய்து திருமணத்தையுஞ் செய்துமுடித்தனர். நம் அடிகளாருக்கு வாழ்க்கைத்துணையாதற்கு வந்த அம்மாது நல்லாளின் பெயர் சிவகாமி ஆச்சி என்பது. சிவகாமி ஆச்சி நீண்டகாலம் வாழ்க்கை நடத்தவில்லை. மிகு விரைவாகவே இறைவன் திருவடி நீழலை யெய்தினர்.

### குடிபெயர்தல்

இராமநாதன் செட்டியாருடைய உறவினர்கள் செட்டியாருடைய மருமகள் விரைவாக இவ்வுலக வாழ்வை நீத்தமைகண்டு வருந்தினர். இராமநாதன் செட்டியார்க்குப் பள்ளத்தூர் ஏற்றதன்று என முடிவு செய்து காரைக்குடிக்குக் குடிபெயருமாறு அறிவுரை கூறினர். பழகிய ஊரைவிட்டுச் செல்லச் செட்டியார்க்கு விருப்பமில்லையாயினும் உறவினர்களுடைய வற்புறுத்துதலுக்கு இணங்கிக் காரைக்குடிக்குக் குடிபெயர்ந்தனர்.

### மறுமணம்

இராமநாதன் செட்டியார் மீண்டுந் தந் திருமகனுக்குத் திருமணஞ்செய்ய முடிவுசெய்தார். காரைக்குடி முத்துப்பட்டினத்தில் இருந்த கொ. நா. என்னுஞ் செல்வந்தர் வீட்டில் இலக்குமியாச்சி என்னும் பெண்ணை மணமகளாக முடிவுசெய்து மிகுந்த சிறப்போடு இரண்டாவது திருமணத்தைச் செய்துமுடித்தார். சுவாமிகள் இலக்குமியாச்சியோடு இல்லற வாழ்க்கையைத் தவமுனிவர்களைப் போன்று சிலகாலம் நடத்திக்கொண்டிருந்தார்கள்.

## இலக்கியப் பயிற்சி

அந்நாளில் காரைக்குடியில் இராம. சொக்கலிங்க ஐயா என்னும் சிறந்த புலவர் ஒருவர் இருந்தார். அவர் செட்டியார் வகுப்பைச் சேர்ந்தவர். திரிசிரபுரம் மகா வித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்களுடைய மாணவராகிய வன்தொண்டச் செட்டியார் என்பவரிடம் கல்வியை நன்கு கற்றுத் தேறியவர். புராணங்கள் சிற்றிலக்கியங்கள் முதலிய நூற்றுக்குமேற்பட்ட நூல்களை இயற்றியவர். சைவ சித்தாந்தத்திலும் வல்லவர். சிதம்பரத்தில் மெய்கண்ட வித்தியாசாலையை ஏற்படுத்தியவரும் இவரே. இவருடைய புலமைத் திறத்தை நன்குணர்ந்திருந்த நம் சுவாமிகள் இவரிடங் கல்விகற்க வேண்டுமென்று விரும்பினுர்கள். திருவிளையாடற் புராணம் முதலிய சில நூல்களைப் பாடங்கேட்டு இலக்கியப் பயிற்சி பெற்றுர்கள்.

## துறவியாதல்

நம் சுவாமிகள் முற்கூறியவாறு பல நூல்களையும் பயின்றிருந்தபடியால் மனம் மிகவுஞ் சீரடைந்து வைராக்கியம் முதலிய சிறந்த குணங்களைப் பற்றியிருந்தது. ஒருவன் எவ்வெப்பொருள்களிலிருந்து விடுபடுகின்றுனே அவ்வப்பொருள்களால் உண்டாகுந் துன்பங்கள் அவனை அடையமாட்டாவாம். இதைக் கருதியே தெய்வப்புலவர் திருவள்ளுவரும்,

> ''யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
> அதனில் அதனில் இலன்''

என்று தாமியற்றிய திருக்குறளிலே கூறியிருக்கிருர். நாளடைவில் நம் சுவாமிகள் உள்ளம் துறவுநிலையை

அவாவியது. ஒருவருடைய உள்ளம் உலகப்பற்றுக்களிலே இருந்து விடுபட வேண்டுமானுல் அவர்கள் பல பிறவி களினுஞ் செய்த நல்வினை முதிர்ச்சிபெறவேண்டும். அவ்வாறு முதிர்ச்சி பெற்ருல்தான் இறுதிப் பிறப்பில் வீடு பேற்றில் விருப்பமுண்டாகும். இதுபற்றியே பெரி யோர்கள், ''இனிப் பிறவா முடிவான பிறப்பிலே மெய்ஞ்ஞானம் எளிதிலுண்டாம்'' என்று கூறியிருக் கிருர்கள். நம் சுவாமிகள் உள்ளம் தெய்வவழிபாட்டிலும் அடியார்கள் உறவிலும் மிகுதியாகப் படிந்திருந்தது. அடிக்கடி திருக்கோவிலுக்குச் சென்று இறைவழிபாடு செய்தல் அடியார்களைப் போற்றுதல் முதலிய செயல் களிலே மிகுதியாக ஈடுபட்டிருந்தார்கள்.

குன்றக்குடியென வழங்கும் மயூரகிரியில் எழுந் தருளிய அறுமுகப்பெருமானையே நம் சுவாமிகள் வழிபடு தெய்வமாகக் கொண்டிருந்தார்கள். அடிக்கடி அங்கு சென்று வழிபாடு செய்வது வழக்கம். மேற்படி கோவிலில் முருகப்பெருமானுக்குப் பூசை புரிந்துகொண்டிருந்த நைட்டிகப் பிரமசாரியாகிய சதாசிவக்குருக்கள் என்பவ ரிடம் பக்தி சிரத்தையோடும் ஆகம விதிப்படியும் திருவைந் தெழுத்தாகிய பஞ்சாக்கர உபதேசம் பெற்ருர்கள். திருவைந்தெழுத்தைச் செபஞ்செய்து உருவேற்றினுர்கள். நல்வினைமிகுதியாகியது. இல்லந்துறந்து வெளியே புறப் பட எண்ணினுர்கள். இல்லத்தையும் இல்லாளையும் உறவினரையும் பொருளையுந் துறந்து போய்விடுவ தென்ருல் அஃது எளிதில் நிகழக்கூடியதன்று. ஆனுல் நம் சுவாமிகட்கு அத்துறவுநிலை எளிதில் கிட்டிவிட்டது. பாரனைத்தும் பொய்யெனத் துறந்து சென்ற பட்டினத் தடிகளைப்போல இல்லத்தை விட்டுப் புறப்பட்டார்கள்

கோவிலூர் மடாலயம் இரண்டாவது பட்டம் துறவுச் சுவாமிகள் சந்நியாசஞ் செய்துகொண்ட நெடுங்குடி சிவத்தலத்திற்குச் சென்ருர்கள். இறைவழிபாடு செய்து தம்முடைய எண்ணம் நிறைவேற வேண்டுமென்று இறைவனைப் பாடிப்பரவினுர்கள். தம்முடைய உறவினர் கள் தம் விருப்பத்திற்கு இணங்கமாட்டார்கள் என்பதை நன்குணர்ந்திருந்த சுவாமிகள் எல்லாவற்றையும் மறை முகமாகவே செய்தார்கள்.

## கல்லாடை பேறல்

தாம் முன்கூட்டியே தயார்செய்து வைத்திருந்த காவியுடை என்னுங் கல்லாடையை ஆலமர் கடவுளாகிய தட்சணுமூர்த்தி திருமுன்வைத்துப்பூசை செய்யச் செய் தார்கள். தாம் எல்லாவற்றையுந் துறந்து செய்து கொள்ளுந்துறவு மிகுந்த உறுதியோடு விளங்கவேண்டு மென்று தென்முகக் கடவுளைப் பெரிதும் வேண்டிக் கொண்டார்கள். கல்லாடையை வைத்துப் பூசைசெய்த குருக்களை அவ்வாடையை எடுத்துக் கொடுக்குமாறு கேட்டுக்கொண்டார்கள். குருக்களையாவுந் தீவினைகளை யெல்லாந் தீயச்செய்யுந் திருநீற்றையளித்துஆடையையும் எடுத்துக்கொடுத்தார்கள். நம் சுவாமிகள் திருநீற்றைத் திருநுதலிற் பூசிக் கல்லாடையை அணிந்துகொண் டார்கள்.

## குருதட்சணை

இல்லறத்தாளுக இருந்த தம்மைத் துறவுநிலைக்கு உயர்த்திய குருக்களையாவாகிய குருவுக்குக் குருதட்சணை கொடுக்கவேண்டுமன்ரோ ? அதைக்கருதியே தாம் அது வரையில் துறவாமல் விரலிலேயே விட்டுவைத்திருந்த

அரும்புத் தடை என்னும் உயர்ந்த பொன்மோதிரத்தைக் கழற்றிக் குருக்களிடங் கொடுத்தார்கள். பின்னர் அவ் வூரிலுள்ள அந்தணத்தெருவிற் கரபாத்திரமாக ஐய மேற்றுண்டார்கள்.

### யாத்திரை செய்தல்

ஒருவர் தலயாத்திரைசெய்தால் அவர்க்கு எல்லா வகையான நன்மைகளும் மெய்யறிவும் உண்டாகும். இதனை யெண்ணியே மெய்ஞ்ஞானச் செல்வராகிய தாயுமான சுவாமிகளும், ''மூர்த்தி தலந்தீர்த்தம் முறை யாய்த் தொடங்கினர்க்கோர், வார்த்தை சொல்லச் சற் குருவும் வாய்க்கும் பராபரமே'' என்று திருவாய் மலர்ந் தருளியுள்ளனர்.

### கோயிலூரை யடைதல்

துறவுநிலையை மேற்கொண்ட நம் சுவாமிகள் பல சிவத்தலங்கட்கும் விட்டுணுத்தலங்கட்கும் யாத்திரை சென்றார்கள். பிறகு கோவிலூர் மடாலயத்தை யடைந் தார்கள். அப்போது அங்கு ஸ்ரீ அண்ணாமலை ஞான தேசிக சுவாமிகள் என்னும் பெரியார் ஆருவது பட்டத் தில் ஞானசிரியராக எழுந்தருளியிருந்தார்கள்.

கோவிலூரையடைந்த நம் சுவாமிகள் ஸ்ரீ அண்ணாமலை ஞானதேசிக சுவாமிகளைத் தரிசித்து வணங்கினார்கள். நமது பிறவிப்பிணியைப் போக்க வல்லவர் சீவகாருணியம், ஈசுவரபக்தி, பாசவைராக்கியம், பிரமஞானம் ஆகிய நான்குமே ஓர் உருவெடுத்தாற்போல் விளங்கும் இப் பெருந்தகையே என்று உள்ளத்தில் முடிவுசெய்து, ''ஐயனே! அடியேனுடைய பிறவிப் பிணியைப் போக்கி

அடியேனை ஆட்கொண்டருளவேண்டும்'' என்று போற்றி செய்து வணங்கிநின்றார்கள். ஞானாசிரிய மூர்த்திகள் நம் சுவாமிகளுடைய பக்குவநிலையை ஆராய்ந்துணர வேண்டு மென்று எண்ணினார்கள்.

### கரபாத்திரஞ் செய்யக் கட்டளை

நம் சுவாமிகளைப் பார்த்து, ''அன்பனே! அஞ்சற்க உன் பவப்பிணியைப் போக்கியருள்வோம். காரைக்குடியிற் சிலகாலங் கரபாத்திரஞ் செய்து (கையையேஉண்கலமாகக்கொண்டு ஐயமேற்றுண்ணல்) வருவாயாக'' என்று கட்டளையிட்டருளினார்கள். நம் சுவாமிகள் அக் கட்டளையைத் தலைமேற்கொண்டு காரைக்குடியில் ஐய மேற்றுண்டு வந்தார்கள். ஒருநாள் தமது இல்லத்திற்கே சென்று பிச்சை வேண்டி நின்றார்கள். நம் சுவாமிகளுடைய தாயார் யாரோ துறவிபிச்சைக்கு வந்திருப்பதாக எண்ணி உணவு எடுத்துக்கொண்டு வெளியே வந்தனர். ஐயமேற்க நின்றிருப்பது தம்முடைய அருந்தவப் புதல்வரெனக் கண்ட மெய்யம்மையாச்சி ஆராமை மேலிட்டு அழலிற் பட்ட வெண்ணெயென உள்ளம் உருகி வருந்தினர். அந்தோ ஊழ்வினை இவ்வாறும் இருந்ததே என்று எண்ணி ஏங்கி நின்றனர். நம் சுவாமிகளோ எத்தகைய மனவேறுபாடுமில்லாமல் ஐயத்தையுண்டு அவ்விடத்தை விட்டு அகன்று சென்றார்கள்.

### அடியார்களோடு அறிவு நூல் கற்றல்

கோயிலூரில் எழுந்தருளியிருந்த நம் பரமாசாரியராகிய தவத்திரு அண்ணாமலை ஞானதேசிக சுவாமிகளவர்கள் காரைக்குடியில் நிகழ்ந்த செய்திகளையெல்லாம் உணர்ந்தார்கள். தம் இல்லத்திற்கே ஐயமேற்கச் சென்ற

அன்பனின் மனவுறுதி பாராட்டத் தக்கதே என்று முடிவு செய்து நம் சுவாமிகளை அழைத்து அடியார்களோடு மடத்திலேயே உண்ணுமாறு கட்டளையிட்டார்கள். நம் சுவாமிகளும் குருநாதனுடைய குறிப்பறிந்து செய்ய வேண்டிய பணிவிடைகளையெல்லாஞ் செய்து மனநிறை வுண்டாகுமாறு நடந்துகொண்டார்கள். ஞானசிரியராகிய சுவாமிகள் அடியவரின் நற்குண நற்செயல்களைக்கண்டு உள்ளத்திலே உவகைகொண்டனர். நம் சுவாமிகளைப் பார்த்து, "மடத்தை நம்பியாதுறவு நிலையை நாம் மேற் கொண்டோம். இதனை உனக்கு உணர்த்தக் கருதியே காரைக்குடியில் கரபாத்திரஞ் செய்துவரக் கட்டளை யிட்டோம். இனிமேற் பிற அடியார்களோடு சேர்ந்து ஞானநூல்களை ஓதியுணர்வாயாக" என்று உரைத் தருளினர்கள். நம் சுவாமிகளும் கட்டளை முதலிய ஞான நூல்களை மனப்பாடஞ்செய்து அவைகளின் பொருளை ஞானசிரியர் வாயிலாகக் கற்றுணரப் பெரிதும் விருப் புடையவராக இருந்தார்கள். ஞான தேசிகரவர்கள் நன்னாள் ஒன்றில் ஆண்டவர் திருக்கோவிலில் பூசையில் ஞானநூல்களை வைத்து எடுத்துவருமாறு கட்டளைசெய்த படி நம் சுவாமிகள் தம் அடியவ நண்பர்களோடு நாநா சீவவாதக்கட்டளையைப் பூசையில் வைத்து வாங்கி ஞானசிரியர் பிரமசபையில் எழுந்தருளியிருக்கும்போது தோத்திரஞ்செய்து வணங்கிப் பாடங்கேட்கத் தொடங்கி னர்கள். நாநாசீவவாதக்கட்டளை, கீதாசாரத் தாலாட்டு, சசிவன்னபோதம், மகராசாதுறவு முதலிய நூல்கள் முற்றுப்பெற்று வைராக்கிய சதகம் நடைபெற்றுக் கொண் டிருக்கும்போது திடஞானச் செல்வராக விளங்கிய ஞானசிரியரவர்கள் சித்தார்த்தி வருடம் வைகாசி மீ திருவோண நட்சத்திரத்தில் உடலுபாதி யொழிந்து

சச்சிதாநந்தப் பரப்பிரமத் தோடு இரண்டறக் கலந் தருளினார்கள். இவர்களுடைய குருபூசை ஆண்டுதோறும் வைகாசி மாதம் திருவோண நட்சத்திரத்தில் சிறப்பாக நடைபெறுகிறது.

இரண்டாவது ஞானாசிரியர்

ஸ்ரீ அண்ணாமலை ஞானதேசிக சுவாமிகளவர்கள் வீடுபேற்றை யடைந்தபிறகு தவத்திரு மகாதேவ ஞான தேசிக சுவாமிகளவர்கள் ஏழாவது ஞானாசிரியராகத் தலைமைப் பீடத்தில் அமர்ந்தருளினார்கள். இந்த இரண்டாவது குருமூர்த்தியிடம் நம் சுவாமிகள் வைராக்கிய சதகத்தின் எஞ்சிய பகுதியையும் ஓதியுணர்ந்ததோடு ஞானவாசிட்டம் வரையில் உள்ள பிற ஞானநூல்களையும் வரிசைப்படி ஓதியுணர்ந்து ஏடு வாங்கி ஞானநூற் பயிற்சியை முடிவுசெய்தார்கள்.

இரண்டாம்பாடம் இயம்பல்

நம்முடைய பரமாசிரியராகிய தவத்திருமகாதேவ ஞானதேசிக சுவாமிகளவர்கள் நம் சுவாமிகளுடைய சொல்லாற்றலை நன்குணர்ந்து மகிழ்ந்திருந்த படியால் பிறகு தம்மிடம் ஞானநூல்கற்கும் அடியவர்கட்கு இரண்டாவது முறையாகப் பாடஞ் சொல்லுமாறு கட்டளை யிட்டார்கள். நம் சுவாமிகளும் குருநாதர் கட்டளையைத் தலைமேற்கொண்டு இரண்டாம் பாடங் கற்பித்துக் கொண் டிருந்தார்கள். இவ்வாறு பதினைந்து ஆண்டுகள்வரை சென்றன. சாக்கோட்டை மடம் முதலிய மடங்கட்குச் சென்று நம் சுவாமிகள் விவகாரத் தொல்லைகளில் அகப் படாமல் தங்கியிருப்பதும் உண்டு.

### உறுதி முறி

1926ஆம் ஆண்டில் தவத்திருமகாதேவ ஞானதேசிக சுவாமிகள் அவர்கட்குச் சிறிது உடல்நலக் குறைவு ஏற்பட்டது. அப்போது சுவாமிகள் தமக்குப்பின் தமது பீடத்தில் அமரத்தகுந்த தகுதிவாய்ந்தவர் தம் சீடராகிய சோமசுந்தரனாரே என்று முடிவுசெய்து வழிமுறை வழக்கப்படி ஓர் உறுதிமுறி எழுதிப் பிரஹ்மநிஷ்டாபரராக விளங்கிய தவத்திரு வீரநாராயணசுவாமிகளையும் ஆண்டவர் வகையரா வேங்கடாசல ஐயாவையும் கோட்டையூர் க. வீ. சொ. வீரஅழகப்பையாவையுஞ் சாட்சிக் கையெழுத்திடச் செய்து வைத்திருந்தார்கள். ஆனால் இச்செய்தி அச்சமயத்தில் நம் சுவாமிகள் அவர்கட்குத் தெரியாது.

### வடநாட்டு யாத்திரை

நம் பரமாசிரியராகிய மகாதேவ ஞானதேசிகசுவாமிகளவர்கள் வடநாட்டில் உள்ள காசி முதலிய தலங்கட்கு அடியரவர்களுடன் யாத்திரை சென்றனர். அப்பொழுது நம் குருநாதரவர்களையும் உடனழைத்துக்கொண்டு சென்றனர். யாத்திரை செய்வதில் இயல்பாகவே மிகுந்த விருப்பமுள்ள நம் குருநாதரவர்கள் தம் ஆசிரியருடன் யாத்திரைசெய்து மனங்களித்தார்கள்.

### சிதம்பரம் மடத்தலைமை

சிதம்பரம் என வழங்குந் திருத்தில்லையில் உள்ள ஸ்ரீ பொன்னம்பல சுவாமிகள் திருமடத்திற்கு நம் குருநாதரவர்களை மடாதிபதியாக்க எண்ணிய ஸ்ரீ மகாதேவஞான தேசிகசுவாமிகளவர்கள் நம் சுவாமிகளைச் சிதம்பரத்திற்கு அனுப்பி அம்மடாலயத்தின் காரியங்களை நடத்த எண்ணினார்கள். நன்னாள் பார்த்துத் திருத்தில்லைக்கு

அனுப்பினுர்கள். நம் சுவாமிகளும் தம் குருநாதர் கட்டளேப்படி சிதம்பரஞ் சென்ருர்கள். அப்பொழுது அங்கிருந்த முத்து கிருட்டிணசாமி, அமிர்தலிங்க சாமி முதலிய அடியவர்கள் நிறைகுடம் திருவிளக்கு முதலிய சிறப்புக்களோடு வரவேற்றுப் பாராட்டிப் போற்றினுர்கள். முறைப்படி மான்தோல் இருக்கையில் அமர்ந்தருள் செய்யுமாறு வேண்டிக்கொண்டார்கள். ஆனுல் நம் குருநாதரவர்களோ அவ்வாறு அமராமல் பக்கத்திற் போடப்பட்டிருந்த இருக்கையில் அமர்ந்தார்கள். அடியவர்கள் அனேவருஞ் சுவாமிகளே வணங்கித் திருநீறு பெற்றுக் கொண்டார்கள். சுவாமிகளவர்கள் சிலகாலம் மடத்துக் காரியங்களேக் கவனித்துக்கொண்டிருந்தார்கள்.

## பதவி துறத்தல்

இல்லறம் இரும்பு விலங்கானுல் மடாலயத் தலேமைப் பதவி பொன் விலங்கைப்போன்றது. இதை நன்குணர்ந் திருந்த நம் சுவாமிகள் இப்பதவியாலும் பந்த பாசங்கள் உண்டாம் என்று எண்ணினுர்கள். முருகேச ஐயா என்பவரை உடனழைத்துக்கொண்டு மடத்தை விட்டுப்புறப்பட்டார்கள். அப்போது மடத்தில் காறுபாருகக் காரியம் பார்த்துக்கொண்டிருந்த அமிர்தலிங்கசாமி என்பவரிடம் மடாதிபதிப்பதவி தமக்கு வேண்டியதில்லே யென்று கூறி விட்டுத் திருவாரூர்த் தட்சணுமூர்த்தி மடத்துக்குச் சென்ருர்கள். அப்பொழுது அங்கு ஸ்ரீ சாமிநாதசுவாமி என்ற பெரியார் மடாதிபதியாக இருந்தார்கள். அவர்கள் நம் சுவாமிகள் அங்கு வந்ததைக் கண்டு மகிழ்ச்சியடைந்தார்கள். சிதம்பரம் மடத்துப்பொறுப்பை மேற்கொண்டு கவனித்தலே தக்கதாமென்று அறிவுரை கூறிச்சிதம்பரத்திற்கனுப்ப முயற்சி செய்துகொண்டிருந்தார்கள்.

**மீண்டு சிதம்பரம் வருதல்**

கோவிலூரில் எழுந்தருளியிருந்த நம்பரமாசிரிய ராகிய ஸ்ரீ மகாதேவ ஞானதேசிக சுவாமிகள் செய்தியை உணர்ந்தார்கள். சிதம்பரம் மடத்திற்குச் சென்று தங்கியிருந்துகொண்டு, மடத்திலிருந்த அமிர்தலிங்க சுவாமியையும் இளமையாக்கினுர் கோயில் வழிமுறைத் தருமபரிபாலகர் பெரி. க. வகை சோமசுந்தரஞ் செட்டி யாரையும் திருவாரூர் மடத்துக்கனுப்பி நம் சுவாமிகள வர்களை அழைத்துக் கொண்டுவர ஏற்பாடு செய்தார்கள். அழைக்கச் சென்றவர்கள் திருவாரூர்க்குச் சென்று மடத்துச் சுவாமிகளிடம் விவரந்தெரிவித்ததோடு நம் சுவாமிகளையுங்கண்டு கோவிலூர் மகாசந்நிதானத்தின் கட்டளையைத் தெரியப்படுத்தினுர்கள். திருவாரூர்ச் சுவாமிகள் நம் சுவாமிகளைப் பார்த்துத் ''தாங்கள் கட்டாயம் சிதம்பரத்திற் கெழுந்தருள வேண்டு''மென்று வற்புறுத்தினுர்கள். நம் சுவாமிகளவர்கள் குருநாத ருடைய கட்டளையை மறுத்தற்கஞ்சித் திருவாரூர்ச்சுவாமி களிடம் விடை பெற்றுக்கொண்டு சிதம்பரத்தை யடைந்து தம் குருநாதரைக்கண்டு அடிபணிந்து நின்ருர்கள். பலவாறு இன்னுரை பகர்ந்த கோவிலூர் மகாசந்நிதான மவர்கள், ''நாமனைவரும் மனவுறுதி கொண்டு மடாலயங் களையுந்துறந்து யாத்திரை சென்று விட்டால் மடங்களின் நிலையென்னுகும். நம்முடைய திருமடங்கள் மேலுஞ் சிறந்து விளங்கிச் சிறப்படைய வேண்டாவா'' என்று பலவாறு நல்லுரை நவின்று மகிழ்ந்திருந்தார்கள்.

**குடமுழுக்கு**

திருத்தில்லையில் எழுந்தருளியிருந்த நம்பரமாசிரிய ராகிய ஸ்ரீ மகாதேவஞான தேசிக சுவாமிகளவர்கள்

பொன்னம்பல சுவாமிகள் சமாதிமடாலய சிவலிங்கத் திற்கு மருந்து சாத்திக் குடமுழுக்குச் செய்யவும் நம் சுவாமிகளை முறைப்படி மடாதிபதி யாக்கவுந் திருவுளங் கொண்டார்கள். கோயிலூர் மடத்தில் இருந்த ஸ்ரீ வீர. நாராயணசுவாமிகள், சிக்கல் மடத்தில் மடாதிபதியாக இருந்த ஸ்ரீ மாரிமுத்துச் சுவாமிகள், முதலிய பல பெரியோர்கட்கும் மடங்களுக்குந் திருமுகங்களனுப்பிச் சிதம்பரத்திற்கு அழைத்தார்கள். இலிங்கத்திற்குச் சாஸ்திர முறைப்படி மருந்துசாத்தி அம்பலத்தாடி மடத் தார் அவர்களைக்கொண்டு கடஸ்தாபனஞ்செய்து, சிவலிங் கத்திற்கு வெள்ளிப் பந்தனஞ்செய்து கும்பாபிடேகஞ் செய்தார்கள். வந்திருந்தவர்கட்கு அன்னதானம் சொன்னதானம் அடியவர்கட்கு வஸ்திரதானம் முதலிய எல்லாத் தானங்களும் நன்முறையிற் செய்யப்பெற்றன.

ஞானசாரியராக்குதல்

கோவிலூர் மஹாசந்நிதானமவர்கள் நம் சுவாமி களைக் குருபீடத்திலமர்த்தி ஞானசிரியராக்கத் திரு வுளங்கொண்டார்கள். கோவிலூர் மஹாசந்நிதானத் திற்கும் நம் சுவாமிகட்கும் சமமாக ஆசனங்கள் விரிக்கப் பெற்றன.

முதலில் கோவிலூர் மகா சந்நிதானமவர்கள் தமது ஆசனத்தில்அமர்ந்து பின் நம் குரு சுவாமிகளையும் ஆசனத் தில் அமரும்படி கட்டளையிட்டார்கள். நம் சுவாமிகளாகிய குருநாதரும் தம் ஆசிரியர் கட்டளைப்படி நமஸ்கரித்து ஆசனத்தில் அமர்ந்தார்கள். குருநாதரிடத்தில் பாடங் கேட்பதற்குப் பேரார்வத்தோடு காத்திருந்த அடியேனுகிய இராமலிங்கமும், பெருமாளையாவும், சேலம் முருகேசை

யாவும் ஆகிய மூவரும் நாநாசீவ வாதக்கட்டளை நூலைக் குருநாதர் திருமுன்பு வைத்துக் கீழே வீழ்ந்து சாஷ்டாங்கமாக வணக்கஞ்செய்து பலவாறு குருதோத்திரப் பாடல்களால் புகழ்ந்து போற்றி ஏடு வாங்கிக்கொண்டோம்.

“நூல்பயி லியல்பே நுவலுங் காலைப்
பொழுதொடு சென்று வழிபடல் முனியான்
இருவென இருந்து சொல்லெனச் சொல்லிச்
சித்திரப் பாவையி னத்தக வடங்கிச்
செவிவா யாக நெஞ்சுகள னாகக்
கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்துப்
போவெனப் போதல் என்மனார் புலவர்”

என்றதற் கேற்பப், பின் குருநாதர் அவர்கள், ‘படி’ என்று கூறியபின் படித்தோம். பரமாசிரியராகிய கோவிலூர் ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள், “பொருள் விளக்குக” என்று எம் குருநாதர்க்குக் கட்டளையிடக் குருநாதரவர்களும் கம்பீரமாகப் பொருள் கூறி உபதேச முறைப்படியாகப் பொருளை உபதேசித்தார்கள். பாடம் நடக்குமிடத்தில் இருந்த பெரியோர்களைப் பார்த்து நம்பரமாசிரிய சுவாமிகள் “கற்பக தருவைச்சேர்ந்த காகமும்” என்று சொல்லிய உடனே, ஸ்ரீ மாரிமுத்துச் சுவாமிகளவர்கள் “பொன் நிறமாகும்” என்றார்கள். பரமாசிரிய சுவாமிகள், “ஆகுமா? ஆகட்டும் ஆகட்டும் ஆகட்டும்” என்று மூன்று முறை மொழிந்து மகிழ்ந்தார்கள். பின் குருநாதரவர்கள் முடிக்குமாறு மொழிந்ததும் குருவணக்கம்பாடி முடித்தோம். இந்நிகழ்ச்சிகளை அங்குக் குழுமியிருந்த அன்பர்களனைவருங் கண்டுங் கேட்டும் மகிழ்ந்தார்கள். இவ்வாறு நம் குருநாதரவர்கள் சிதம்பரம்

கோ. சித மடத்தின் மடாதிபதியாகக் குருசீட முறைப்படியாகவும் பதிவான உறுதி முறிப்படியாகவும் முழு உரிமையுமுள்ள மடாதிபதியாக ஏற்படுத்தப் பெற்ருர்கள். நம் குருநாதரவர்களும் குருபரம்பரைமரபு சிறந்தோங்குமாறு தமது தபோபலத்தால் மடாலயத்தைப் பாதுகாத்துத் தம்மையடைந்த முமூட்சுக்கள் அநேகர்களுக்கு ஞான நூல்களேப்போதித்து வேதாந்த நூல்களே விளக்குவதிற் சிறந்து விளங்கினுர்கள்.

## சுவாமிகள் செய்த பலவகைத் திருப்பணிகள்

மடத்தை அறநிலேயத் தொடர்புடையதாகச் செய்து நீண்டகாலமாக நடந்து கொண்டிருந்த வழக்கை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்து வெற்றிகண்டார்கள். ஸ்ரீ அண்ணுமலே ஞானதேசிகர் காலம் முதல் அம்பலவாணப் பெருமானுக்கு நடந்து வந்து கொஸ்துக்கட்டளே நன்ருக நடைபெறச் செய்தார்கள். மேலும் இருமடத்தின் பேரிலும் இருந்த பலகட்டளேகளேயும், பாவாடைகளேயும் தில்லே வாழந்தணர்கட்கு மனநிறைவு உண்டாகுமாறு சிறப்பாக நடத்திவந்தார்கள். ஸ்ரீ பொன்னம்பல சுவாமிகளவர்களால் திருப்பணி செய்யப்பெற்ற இளமையாக்கிஞர் கோவிலில் நடந்துவருங் கட்டளேகளேயுஞ் சிறப்பாக நடத்தி வந்தார்கள். மடாலயத்துக் கட்டிடங்களில் பழுதானவைகளேப் புதுப்பித்துக்கட்டினுர்கள். எறும்பூர் ஸ்ரீதத்துவராய சுவாமிகள் சமாதிக் கோயில் பழுதுபட்டிருந்ததைப் பெரும்பொருள் செலவு செய்து திருப்பணிகள் நடத்திக்குடமுழுக்குச் செய்வித்தார்கள். பர்மா முதலிய இடங்களில் மடத்துக் குரியதாக இருந்த பொருள்களே, இந்தியர் பொருளேப் பர்மா அரசாங்கத்தார் பறிமுதல் செய்வதற்கு முன்னரே கொண்டுவந்து பாங்கி

களில் கொடுத்துப் பொருளைப் பாதுகாத்துப் பெருகுமாறு செய்தார்கள். மடத்துக் குரியனவாகச் சிற்றூர்களில் இருந்த வயல் முதலியவைகளின் வரும்படியுங்குறை யாமல் தக்கவாறு பாதுகாத்தார்கள்.

### சுவாமிகளின் குணாதிசயங்கள்

நம்முடைய குருநாதராகிய சுவாமிகளின் குணங்கள் பெரிதும் வியந்து பாராட்டத்தக்கவை. சில சமயங்களில் சுவாமிகள் சினமுடையார் போன்று வெளிக்குக் காணப் பெறுவார்கள். ஆனால் உள்ளத்திலோ எத்தகைய சினமும் இராது, சுவாமிகள் தம்மை ஒரு மடாதிபதி என எண்ணி எந்தக் காலத்திலும் நடந்துகொண்டதே யில்லை. பொதுவான ஓர் சந்நியாசி அடியவர்போன்றே விளங்கி வந்தார்கள். தம்மிடம் வருவாரை உசாவிப் போற்றுவதிற் சுவாமிகள் கண்ணுங் கருத்துமாக இருந் தார்கள். தம்மிடம் வரும் மெய்யன்பர்களைப் பார்த்துச் சுவாமிகள் கேட்கும் முதற்கேள்வி பெரும்பாலும், சாப் பாடாய்விட்டதா ? நலமா ?'' என்பனவாகவேயிருக்கும். சுவாமிகள் அடியார்கட்குத் தாய்தந்தையர்போன்று விளங்கியிருந்தார்கள் என்பது உபசார மொழியன்று.

### நூல்கள் வெளியிடுதல்

ஸ்ரீ பொன்னம்பல சுவாமிகளவர்களால் உரையெழு தப்பட்ட பகவத்கீதை, கைவல்லிய நவநீதம் ஆகிய உரை நூல்கள் வேதாந்த நூல்களைக் கற்பவர்கட்கு முட்டுப் பாடில்லாமல் கிடைக்குமாறு அச்சிட்டு வெளியிட்டார்கள். ஸ்ரீ தத்துவராய சுவாமிகள் பாடியருளிய பாடுதுறை யென்னும் நூலையும் பதிப்பித்து வெளியிட்டார்கள்.

மேலும் சுவாமிகள் சிறிய நூல்கள் பலவற்றையும் அச்சிட்டு வெளியிடச் செய்திருக்கிறார்கள்.

கோவிலூர் சென்றுவரல்

கோவிலூர் மகா சந்நிதானமவர்கள் நம் குருநாதரைக் கோயிலூர் மடாதிபதியாக அமர்த்துவதற்கு உறுதிமுறி எழுதிவைத்திருந்தார்கள் என்றும் அச்செய்தி நம் சுவாமிகட்குத் தெரியாதென்றும் முன்னரே கூறியிருக்கின்றோம். அவ்வுறுதி முறி 1926ஆம் ஆண்டில் எழுதப்பெற்றது. 1947ஆம் ஆண்டிலும் ஓர் உறுதி முறி எழுதி இரண்டு உறுதி முறிகளையும் காரைக்குடி முத்துப்பட்டணம் சிதம்பரஞ்செட்டியார் என்பவரிடங் கொடுத்து நங் குருநாதரிடங் கொடுக்குமாறு சிதம்பரத்திற்கு அனுப்பிருந்தார்கள். அச் செட்டியாரவர்களும் அவ்வுறுதி முறிகளைக் கொண்டு வந்து நன்னாள் ஒன்றில் நம் குருநாதரவர்களிடஞ் சேர்ப்பித்தார். அவ்வுறுதி முறிகளைக் கண்ட நம் குருநாதரவர்கள் மிகுந்த வியப்படைந்தார்கள், " நாம் எதிர்பார்க்கவும் இல்லை; விரும்பவும் இல்லையே " என்று கூறினார்கள். "எல்லாம் திருவருட் செயல்படி நடக்கும்" என்று கூறியருளினார்கள். கோவிலூருக்குப் புறப்பட்டுப் போய்க் குருநாதரைக்கண்டு புஷ்பாஞ்சலி செய்து வணங்கினார்கள். "சுவாமிகளின் திருவருள் (அனுக்கிரகம்) இருந்தால் போதுமே " என்றார்கள். பரமாசிரிய சுவாமிகளவர்கள் 'இருக்கிறது! இருக்கிறது!! இருக்கிறது!!!" என்று மூன்று முறை மொழிந்து திருநீறு வழங்கினார்கள், இவ்வைபவங்களைக் காணும் பாக்கியம் சுவாமிகட்குத் தவத்தொண்டு செய்யும் அடியேனுக்குக் கிடைத்தது. கோயிலூர் மடாலயத்திற் சில நாட்கள் தங்கியிருந்து மீண்டுஞ் சிதம்பரத்தை யடைந்தார்கள்.

**பரமாசிரியரவர்கள் பரகதியடைதல்**

1947ஆம் ஆண்டு ஆனித்திங்களில் நம்பரமாசிரிய சுவாமிகளவர்கட்கு உடல்நலங் குன்றியிருக்கிறதென்று செய்தி கிடைத்தது. உடனே புறப்பட்டுக் கோவிலூரை யடைந்து சுமார் பதினைந்து நாட்கள் தங்கியிருந்தார்கள். ஒருநாள் நம் குருநாதரவர்கள் தம் குருநாதரவர்களைப் பார்த்து, ''விவகாரம் மனத்துக்குத் தொல்லையாக இருக்கிறது'' என்று விண்ணப்பஞ் செய்தார்கள். அதற்குப் பரமாசிரிய சுவாமிகளவர்கள், ''அந்தமனம் யாரிடத்தில் இருக்கிறது?'' என்று வினவியருளியதோடு, ''விவகாரங்களை இராமலிங்கம் பார்த்துக் கொள்வான்'' என்றுந் திருவாய் மலர்ந்தருளினார்கள். நம் பரமாசிரிய சுவாமிகளவர்கள் ஆங்கிலம் 1947 க்குச் சரியான சர்வசித்து வருடம் ஆனிமாதம் 12ஆம் நாள் குருவாரமும் அஸ்த நட்சத்திரமுங்கூடிய நன்னாளில் விதேக கைவல்லிய மடைந்தார்கள். இவர்களுடைய குருபூசை ஆண்டு தோறும் ஆனிமாதம் அஸ்த நட்சத்திரத்தில் சிறப்பாக நடைபெறுகிறது.

**கோவிலூர் மடத்தலைமை**

அன்று முதல் நம் குருநாதரவர்கள் கோவிலூர் மடாலயத்தின் தலைமைப் பதவியை மேற்கொண்டார்கள். தம் குருநாதருக்கு மோட்சதீபம் முதலிய விழாக்களை விமரிசையாக நடத்தினார்கள். தம் ஆசிரியரவர்கள் நடத்திவந்த கைவல்ய நவநீத பாடத்தைத் தொடர்ந்து நடத்தி முடிவு செய்தார்கள். தம்மை வந்தடைந்த சிஷ்ய கோடிகட்கு நாநா சீவவாதக் கட்டளை முதல் ஞானவாசிட்டம் வரை முறைப்படி உபதேசிக்கலானார்கள். சுவாமிகளிடம் அவ்வாறு பாடங்கேட்டு ஏடு வாங்கியவர்

களில் அடியேனுகிய இராமலிங்கம், விநாயகசாமி, கோபால்சாமி, மருதமுத்தையா ஆகிய நால்வர் குறிப் பிடத் தக்கவர்களாவோம்.

### பலவகைப் பணிகள்

1947ஆம் ஆண்டு முதல் 1950ஆம் ஆண்டு வரை கோவிலூர் ஆதீனமும் அதைச் சேர்ந்த கிளைமடங்களும் எல்லா நலங்களும் இனிது பெருகிச் செல்வ நலம் பொழிந்து சிறந்தோங்கி விளங்கிவந்தன. 1948 ஆண்டு ஆனித் திங்களில் நம்பரமாசிரிய சுவாமிகளின் சமாதிக் கோயில் நகரத்தார்களுடைய பொருளுதவியினுல் திருப் பணி செய்து முடிக்கப்பட்டு மகாகும்பாபிடேகமும் முதலாண்டுக் குருபூசையும் மிகச் சிறப்பாக நடத்தப் பெற்றன. அச்சமயம் அடியார்களும் நகரத்தார்களும் மிகுதியாக வந்திருந்து சிறப்பித்தார்கள். வந்திருந்தவர் கட்கு அன்னதானம், சொர்னதானம், வஸ்திரதானம் முதலியன சீருஞ்சிறப்புமாக நடைபெற்றன. திரு நெல்லையம்பாள் சமேத இராசகட்கபரமேசுரர் திருக் கோயிலில் சிறப்பாகப் பூசை நடைபெற்றது. சிதம்பரம் கூத்தப்பெருமானுக்குப் பாவாடையுடன் சிறப்பாகப் பூசை நடைபெற்றது.

### கிராமங்கட்கு எழுந்தருளல்

வழி முறை வழக்கப்படி நம் குருநாதரவர்கள் மடத் துக்குச் சொந்தமான களத்தூர் முதலிய சிற்றூர்கட்கு எழுந்தருளினுர்கள். அவ்வூர்களில் மடாலயத்தின் பாது காப்புக்குட்பட்ட திருக்கோயில்களில் சிறப்பாகப் பூசை நடைபெறச் செய்தார்கள். ஏழைமக்களுக்கு அன்ன தானஞ் செய்தார்கள். மற்றுஞ் சிற்றூர் மக்கட்குச்

செய்யவேண்டிய உதவிகளையுங் கேட்டறிந்து செய்தார்கள்.

செயற்கருஞ்செயல்

அரசாங்கத்தார் இயற்றிய சமீன் ஒழிப்பு இனும் ஒழிப்புச் சட்டத்தை எதிர்த்து, செட்டில்மெண்டு கோர்ட் முதல் உயர்நீதி மன்றம் வரை சென்று வழக்காடி வெற்றி பெற்ருர்கள். கோவிலூர் மடாலயம் சட்டப்படி எண் டோன்மெண்டு போர்டில் கட்டுப்பட்டிருந்ததை 1951 ஆம் ஆண்டில் இந்து அறநிலையப் பாதுகாப்புப் போர்டோடு வழக்காடி மேற்படி சட்டத்திற்குக் கோவிலூர் மடம் உட்பட்டதில்லை என்று 1954ஆம் ஆண்டில் உயர்நீதி மன்றத்தில் தீர்ப்பு வாங்கினுர்கள். இது மிக வியக்கத் தக்க செயலாகும். "செயற்கரிய செய்வார் பெரியர்" என்னுந் திருவள்ளுவர் திருவாக்கிற்கு இஃதோர் எடுத்துக்காட்டாக அமைந்தது.

திருப்பணிகள்

கோவிலூர் ஆதீனத்தைச் சேர்ந்த சிக்கல் பொருள் வைத்த சேரி மடத்தின் பிரதானமான கட்டிடம் பழுதுபட்டிருந்ததைப் பிரித்து இப்பொழுதுள்ள மாடிக்கட்டிடமாகக் கட்டினுர்கள். மேற்படி மடத்தின் பாதுகாப்புக்குட்பட்ட ஸ்ரீ சுவர்ணபுரீசுவரர் திருக்கோயில் ஸ்ரீ ஆண்டவர் சமாதிக்கோயில் ஆகியவைகள் பழுதுபட்டிருந்ததைச் சீரணோத்தாரணஞ் செய்வித்துப் பெரும்பொருட் செலவில் குடமுழுக்குச் செய்வித்தார்கள். இக் குடமுழுக்கிற்கு நகர தன வைசியமக்களும் அடியார்களும் பெருந்திரளாக வந்திருந்து சிறப்புச் செய்தார்கள். வந்திருந்தவர்கட்கு அன்னதானம் சொர்னதானம் வஸ்திரதானம் முதலியவைகள் தகுந்தபடி செய்யப்பெற்றன.

சிருங்ககிரிசெல்லல்

சிருங்ககிரி சகத்குரு திருமடத்தில் அதிருத்ர சண்டிகா யாகம் நடைபெற்றது. அந்த யாகத்திற்கு வருமாறு சகத்குரு ஸ்ரீ ஆசாரியாரவர்கள் ஸ்ரீமுகா சுந்தரம் ஐயர் என்பவரிடம் திருமுகங்கொடுத்து அழைப்பு அனுப்பினர்கள். நம் குருநாதரவர்கள் பல அடியார்கள் புடைசூழ அந்த யாகத்திற்குச் சென்ருர்கள். அந்த யாகத்தின்பொருட்டு நகரத்தார்களிடம் வாங்கிய காணிக்கையைச் செலுத்திக் கருணநிதி காலமுதல் வழிவழி முறையாக மேற்படி மடத்தோடு அமைந்த தொடர்பு விளங்கப் பாதகாணிக்கை செலுத்தினர்கள். சிருங்ககிரி மகா சந்நிதானமாக விளங்கிய ஸ்ரீ மகாசந்நி தானம் அபிநவ வித்யாதீர்த்த பாரதி சுவாமிகளும் நம் கோவிலூர் மகா சந்நிதானம் அவர்களை வழிமுறை வழக்கப்படி உபசரித்தார்கள். ஆசாரிய சால்வை போர்த்திக் கல்லாடை வழங்கி மகா வாக்கிய உபதேசஞ் செய்தார்கள். ஆசீர்வாத சுலோகமும் வாசித்துக் கொடுத்தார்கள். நம் குருநாதரவர்கள் சிருங்ககிரி மடத்தில் இருபத்திரண்டு நாட்கள் தங்கி ஸ்ரீ சாரதா சந்திர மௌளீசுவரரையும் ஸ்ரீஆசாரியார் இருவர் களையும் தெரிசனஞ் செய்தார்கள். அப்பொழுது உடனிருந்த தம்முடைய சீடர்களுக்கு (அவர்களாவார் அடியேனகிய இராமலிங்கம் சொரூபாநந்த ஐயா முதலிய ஆறுபேர்கட்கு) ஸ்ரீ ஆசாரியாரவர்கள் ஸ்ரீ சாரதாம்பாள் சந்திரமௌளீசுவரர் பூசையில்வைத்து அருள் செய்து கொடுத்த ஸ்ரீ ஞானவாசிட்டத்தைப் பாடம் நடத்தினர் கள். ஸ்ரீ ஆசாரியாரவர்களும் நம் குருநாதரோடு நாள் தோறும் உரையாடுங்கால், "இன்று எது வரை பாடம் நடந்தது?" என்று விருப்பத்துடன் உசாவி மகிழ்ந்தார்

கள். இவ்வாறு 22 நாட்கள் சிருங்ககிரியில் இருந்த பிறகு ஸ்ரீ ஆசாரியாரவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டார்கள். நெரூர் வந்து ஸ்ரீ சதாசிவப் பிரமேந்திரருடைய சமாதிக் கோவிலில் மூன்று நாட்கள் தங்கித் தியானம் பாடம் முதலியன நடத்திக் கோவிலூரை யடைந்தார்கள்.

## ஆசாரியார் விசயம்

சிருங்ககிரி ஸ்ரீஆசாரியார் அபிநவ வித்தியா தீர்த்த சுவாமிகளவர்கள் இராமேசுவர யாத்திரை புறப்பட்டார்கள். அப்போது கோவிலூருக்கு வந்து ஏழு நாட்கள் தங்கினார்கள். அக்கால வழக்கப்படி நிறைகுடம் முதலிய சிறப்புக்களுடன் ஸ்ரீ ஆசாரியாரவர்களை நம் குருநாதரவர்கள் வரவேற்றுப் பிச்சைபண்ணி வைத்தார்கள். பிரம சபையில் பாத பூசையும் செய்தார்கள். ஆசாரியாரவர்கட்குப் பாதபூசை செய்ய எல்லோரும் அனுமதிக்கப்பட்டார்கள். மைசூர் மன்னர் குடும்பம் முதலிய சில முதன்மையாளர்களே சிறப்பாகப் பாத பூசை செய்வதற்கு அனுமதிக்கப்படுவர். எல்லோரும் பாதபூசை செய்ய வழி கோலியது நம் குருநாதரவர்களே. ஸ்ரீ ஆசாரியாரவர்கள் காரைக்குடி, பள்ளத்தூர், கோட்டையூர், தேவகோட்டை முதலிய ஊர்கட்கு எழுந்தருளியபோது நம் குருநாதரவர்களும் அடியார்களோடு சென்று வரவேற்பு முதலியவைகளிற் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். கோயிலூர் ஆதீனத்தைச் சேர்ந்த கிளை மடங்கட்கும் ஸ்ரீ ஆசாரியாரவர்களை நம் குருநாதரவர்கள் அழைத்துப்போய், பாதபூஜை முதலிய வழிபாடு செய்தார்கள். இதனால் சிருங்ககிரி மடத்திற்கும் கோவிலூர் மடத்திற்கும் வழிமுறையாக உள்ள

தொடர்பானது மேலும் நீண்டு உறுதி பெற்றது. ஸ்ரீ ஆசாரியாரவர்கள் பொன்பொதிந்த கௌரிசங்கர உருத்திராக்கக் கண்டியை நம் குருநாதரவர்கட்கு அணிவித்துப் பொன்னுடை போர்த்திச் சிறப்புச் செய்து பேரருள் புரிந்தார்கள். நம் குருநாதரவர்களும் ஸ்ரீ ஆசாரியார் அவர்களைச் சற்குருவாகப் பாவித்து வழிபட்டார்கள்.

## ஆலயக் கட்டளைகளை நடத்தல்

கோவிலூர் ஸ்ரீ ஆண்டவர் காலம் முதல் அவ்வக் காலங்களில் இருந்த குருமூர்த்திகளால் ஸ்ரீவீரசேகர ஞானதேசிகர்காலம் வரை திருப்பணியுங் கும்பாபிடேகமுஞ் செய்த ஸ்ரீ திருநெல்லையம்பாள் சமேத ஸ்ரீ கொற்றவாளீசுவரர் ஆலயத்தில் நடந்து வந்த அறக்கட்டளைகளையெல்லாம் நம் குருநாதரவர்கள் கண்ணுங்கருத்துமாகப் போற்றிப் பாதுகாத்துச் சிறப்புடன் நடத்தி வந்தார்கள். தில்லைக் கூத்தப்பெருமானிடம் பேரன்புவைத்து அப்பெருமானுக்கு நடைபெற்ற கட்டளைகளையெல்லாஞ் சிறப்பாக நடைபெறச் செய்ததோடு நடைபெறும் மகா அபிடேகங்களையும் சிறப்பாக நடத்தச் செய்தார்கள்.

## சுவாமிகளின் ஒழுகலாறுகள்

நம் குருநாதரவர்கள் முதற்கண் முருகப்பெருமானைத் தம் வழிபடு கடவுளாகக் கொண்டிருந்தார்களாதலின் அப் பெருமானுடைய சஷ்டி, கார்த்திகை முதலிய நாட்களில் கடுமையான விரதங்களை மேற்கொண்டிருந்ததோடு அர்ச்சனை முதலியவைகளும் நடைபெறச் செய்தார்கள். தம் முதல் குருநாதராகிய ஸ்ரீ அண்ணாமலை ஞானதேசிகரவர்கள் வீடுபேறடைந்த திருவோண

நட்சத்திரத்தில் உபவாசமிருந்து திருவுருவப் படத்திற்கு அர்ச்சனை முதலியவைகளைப் பக்தி சிரத்தையுடன் செய்தார்கள். சிருங்ககிரி ஸ்ரீ ஆசாரிய சுவாமிகளின் பிறந்தநாளைத் திங்கள்தோறுஞ் சிறப்பாகக் கொண்டாடினார்கள். நோன்புகளை மேற்கொண்டிருக்கும் நாட்களில் காலையிலும் இரவிலும் உணவு கொள்ளமாட்டார்கள். நம்முடைய குருநாதரின் திருமேனி நோன்புகளாலுந் தவத்தாலும் மிகவும் மெலிந்து எப்பொழுதுஞ் சிறிய சுந்தரவடிவமாக விளங்கிக் கொண்டிருந்தது. சுவாமிகள் தம் திருமேனியைப் படம் எடுக்கச் சம்மதிக்கவில்லை. ஆகவே பந்தியில் மகேஸ்வரபூஜையின் போது மறைமுகமாகப் படம் எடுத்தார்கள்.

நம் குருநாதரவர்கள் ஞான நூல்களில் கூறப்பட்ட முறைப்படி ஒழுக்கமுடையவர்களாகவும் கடுமையான வைராக்கியம் உடையவர்களாகவும் சிறிதுஞ் சொற்பழுது புரியாதவர்களாகவும் மிகுந்த இரக்க மனம் உடையவர்களாகவும் இருந்தார்கள். தம்மை வந்தடைந்த மாணவர்கட்கு ஏதேனுந் துன்பம் நேரின் தமக்கு நேர்ந்ததுபோல் உள்ளம் வருந்துவார்கள். ஏழை எளியவர்களிடம் மிகுந்த பரிவு காட்டினார்கள். அந்தணர்களிடம் மிகுந்த அன்புடையவர்கள். அவ்வந்தணர்களிலும் வேதசாஸ்திரங்களைக் கற்றவர்களிடம் மிகப் பேரன்பு கொண்டிருந்தார்கள். தில்லைவாழந்தணர்களிடம் மிகுந்த பக்தியுடையவர்கள். அவர்களைக் கூத்தப் பெருமானாகவே பாவித்துப் போற்றினார்கள். சுவாமிகளின் இத்தகைய சீரிய குணத்தைக் கண்ட தில்லைவாழ்ந்தணர்களும் நம் குருநாதரிடத்தில் மிகுந்த அன்பு பாராட்டினார்கள்.

## சிதம்பரத்தில் 17 ஆண்டுகள்

நம் குருநாதரவர்கள் சிதம்பரம் ஸ்ரீ பொன்னம்பல சுவாமிகளின் திருமடத்துக்குமட்டும் தனித்த மடாதிபதியாக ஏறக்குறையப் பதினேழு ஆண்டுகள் இருந்தார்கள். அக்காலத்தில் வீடுபேற்றில் விருப்பமுடையவர்களாய் வந்தடைந்த பல மாணவர்கட்கு அறிவு நூல்களைப் போதித்து அவர்களை மெய்யறிவாளர்களாகச் செய்தார்கள். நாடோறும் ஞான நூற்பாடங்கள் நடைபெற்றன. ஸ்ரீபொன்னம்பல சுவாமிகளின் குருபூசை ஐப்பசி மாதத்தில் சித்திரை நட்சத்திரத்தில் பெரும்பாலுந் தீபாவளி நாளில்வரும். அக்குருபூசையை மிகு விமரிசையாக நடத்திக்கொண்டிருந்தார்கள். ஆனி மாதத்திலும் மார்கழிமாதத்திலும் திருத்தில்லையில் கூத்தப் பெருமான் தரிசனத் திருவிழா நடைபெறுவதை அனைவரும் அறிவர். அவ்விழாக்காலங்களில் மடத்துக்கு வரும் அடியவர்கட்கும் நகரத்தார்களுக்கும் ஏழை எளியவர்கட்கும் உணவு முதலியன அளித்து ஆதரித்தார்கள்.

## ஸ்ரீ தண்டபாணி தீட்சிதர் பாராட்டுதல்

நம் குருநாதரவர்கள் தில்லையம்பலவாணப் பெருமானாகிய நடராசப் பெருமானிடம் கொண்டிருந்த பக்தியாலும் திருக்கோயில் வழிபாட்டு முறையினாலும் திருக்கோவிலுக்குச் செல்லும் போது பெரும்பாலுங் கால்நடையாகவே செல்லுவார்கள். தேரோடுந் திருவீதியையும் வலம் வருவார்கள். பின் உட்சுற்றிலும் வலம் வந்து திருக்கோவிலுக்குட் செல்லுகிற பழக்கத்தை மேற்கொண்டிருந்தார்கள். ஒருநாள் தேரோடுந் திருவீதியில் வலம் வந்துகொண்டிருந்தபோது, மகாமகோபாத்தியாயரும் வியாகரணபண்டிதருமாகிய ஸ்ரீ தண்டபாணி தீட்சிதர்

என்னும் பெரியார் தம் இல்லத்தில் இருந்து எழுந்து நடு வீதிக்கு வந்து பாதசாரியாக வந்துகொண்டிருந்த நம் குருநாதரவர்களைக் கண்டு உபசாரமொழிகள் பல உரைத்து, மேலுஞ் சுவாமிகளைப் பார்த்துத் "தங்களுடைய சீலத்தையும் திட வைராக்கியத்தையும் ஆசிரமதர்மத்தில் தாங்கள் கொண்டிருக்கிறபற்றையும் நாங்கள் பெரிதும் பாராட்டுகிறோம்" என்றுரைத்துப் பெரிதும் பாராட்டிச்சென்றார்கள். இவ்வாறு நம் குருநாதரவர்கள் ஆசிரமதருமநெறியிற் சிறிதும் வழுவாதவர்களாக இருந்தார்கள். இவ்வாறு ஸ்ரீ சுவாமிகள் ஒழுகியதை உலகம் நன்கறியும். நம் குருநாதரவர்கள் தமக்கிருந்த திடஞானபலத்தால் எதற்குங்கலங்காத உள்ள முடையவர்களாக இருந்தார்கள். ஸ்ரீ சுவாமிகள் அறநெறியிற் சிறிதும் வழுவமாட்டார்கள். உலகாபிமானம், தேகாபிமானம் முதலிய அபிமானங்கள் சிறிதும் இல்லாதவர்கள். தாய் தாரம் ஆகிய மிக நெருங்கிய உறவினர்களையே பற்றறத் துறந்து வந்தவர்கட்குப் பிற பற்றுகள் எவ்வாறிருக்கும்? நன்னெறி தவறி நடப்பவர்களிடத்தில் வெறுப்புடையவர்களாகவும் அந்நெறி தவறாதவர்களிடத்தில் விருப்பமுடையவர்களாகவும் விளங்கினார்கள்.

## கோவிலூர் மடாலயத்தில் 25 ஆண்டுகள்

நம் குருநாதரவர்கள் கோவிலூர் மடாலயத்தில் தம்முடைய குருஸ்தானத்தை ஏறக்குறைய இருபத்தைந்தாண்டுகள் வரை பாதுகாத்துப் போற்றினார்கள். தம் பரமகுருவாகிய ஸ்ரீ வீரசேகர ஞானதேசிகர் என்னும் திருக்களராண்டவரிடத்தில் பேரன்புடையவர்கள். ஒவ்வோராண்டிலுந் திருக்களரிற் குருபூசையைச் சிறப்பாக

நடத்தினர்கள். மாதக்கணக்கில் திருக்களர் மடத்தில் தங்கியிருத்தலும் உண்டு. வேப்பஞ்சேரி என்னும் ஊரில் உள்ள மடத்துச் சுவாமிகளிடமும் நம் ஸ்ரீ சுவாமிகள் மிகுந்த அன்புடையவர்களாக இருந்தார்கள். குரு பூசைக்குச் செல்லுங் காலங்களில் அங்கு செல்வதும் உண்டு. அச்சுவாமிகளும் நம் ஸ்ரீ சுவாமிகளைப் பெரிதும் பாராட்டிப் போற்றினர்கள். நம் ஸ்ரீ சுவாமிகள் கோவிலூர் மடம், சிதம்பரம் ஸ்ரீ பொன்னம்பல சுவாமிகள் மடம், திருக்களர் மடம், சிக்கல் பொருள்வைத்த சேரி ஸ்ரீ உகந்தலிங்க ஞானதேசிகர் மடம், மானுமதுரை கோ. சி. ஸ்ரீநாராயணசாமி மடம், எறும்பூர் மடம் முதலிய பல மடங்கட்கும் தாம் ஒருவரே ஏக மடாதிபதியாக எழுந்தருளியிருந்து சிறப்பாக நடத்தியருளினர்கள்.

**கண்ணுக்கினிய காட்சி**

நம் குருநாதரவர்கள் நாநாசீவவாதக் கட்டளைமுதல் ஞானவாசிட்டம் ஈருகவுள்ள ஞான நூல்களை மாணவர் உளங்கொள்ளும் வண்ணம் போதிப்பதில் மிகவும் வல்லவர்கள். திருநீறும் உருத்திராக்கக் கண்டியும் அணிந்த திருமேனியுடன் ஞானசிரிய பீடத்தில் எழுந்தருளியிருக்கும்போதும் அறிவுரை வழங்கியருளும்போதும் நோக்கின் அக்காட்சி கண்ணுக்கினிய விருந்தாகத்திகழும். அப்பொழுது நம் குருநாதரவர்கள் சாட்சாத் சங்கரராகவே தோற்றமளிப்பார்கள். ''விவகார தசையில் உள்ளே குளிர்ந்து வெளியிற் காய்ந்து விளையாடுவீரா'' என்று இராமபிரானுக்கு ஸ்ரீ வசிட்ட முனிவர் உரைத்தருளியபடி நம் குருநாதரவர்களும் தோன்றுவார்கள்.

''இதமான வெ ரியாய்க் கடிநா சாரம்
இன்றியா சாரங்கட் கெளிது பின்போய்

விதமான அனைத்துக்குஞ் சார்பை நோக்கி
வேண்டியவா றுலகில்வினை யாடு வீரா
புதனுகி நிராசைதனை உள்ளே தேக்கிப்
புறத்தேயா சையிற்றெழில்கள் பூண்டான் போலாய்
அதனுலுட் சீதவமாய்ப் புறம்வெய் தாகி
அனவரதம் உலகில்வினை யாடு வீரா. (க)

வானேகு கதிரிரவி நாளியற்றும்
வாறென்ன வந்து வந்து
தானேதோன் றியதொழிலைப் பற்றின்றிச்
செய்துமெனச் சனக னெண்ணித்
தீனேய வருகாலஞ் செல்காலம்
இமையளவுஞ் சிந்தை செய்யான்
ஊனேறு நிகழ்காலத் தோரிமைப்பி
னகைதலோ டுலாவ லுற்ருன். (உ)

இவன்சுற்றன் இவன்பகைவன் இவனு னென்னும்
இவ்வெறும்பொய் இராமநீ இறையும் எண்ணேல்
அவப்பற்று நொய்யமநத் தவர்க்கிவ் வாரும்
அறிந்தோர்க்குச் சகமுழுதும் அகலாச் சுற்றம்
நிவந்துற்ற பலகோடி பவமோ கத்தால்
நீபகைநீ உறவென்பர் நிமிடந் தோறும்
உவந்துற்ற பயக்கிதுவாம் பரமார்த் தத்தால்
உலகெல்லாம் பகையாகும் உறவு மாகும். (ங)

என்ன துடலிற் சிற்கதிராய்
இலங்குந் தெய்வம் நானென்னை
உன்னு மனங்கள் வாக்குக்கள்
உடைய சத்தித் திரௌல்லாம்
பின்ன மின்றி நாயகனைப்
பிரியா மகளிர் போல்நாளும்

துன்னும் என்றே அனவரதம்
தொடர்பா வனெசெய் திடல்வேண்டும். (சு)

என்னும் ஞானவாசிட்டச் செய்யுட்களை நம் ஸ்ரீகுரு சுவாமிகள் அடிக்கடி கூறுவார்கள். இறுதிக்காலம் வரை இவைகளைச் சொல்லிக்கொண்டேயிருந்தார்கள். நம் குருநாதரவர்கள் சுத்தப்பிரஹ்மமென்னுந் திடத்தினுல் நித்திய திருப்தியுடையவர்களாக இருந்தார்கள். தம்மைப் பார்க்க வருகிறவர்களிடம் ஞானநூற்பொருள்களையே வினவுவார்கள்.

ஓன்பதாவது பட்டம்

நம்குருநாதரவர்கள் தமக்குப்பின் தமதுஸ்தானத்தை மேற்கொள்வதற்குத் தக்கார் யாவரென ஆராய்ந்தார்கள். ஸ்ரீ ல ஸ்ரீ இராமநாத சுவாமிகள் என்பவர்களை 1949 ஆம் ஆண்டில் திருவண்ணுமலை ஈசான்ய மடத்திற்குத் தலைவராக ஏற்படுத்தியிருந்தார்கள். ஷெ சுவாமிகளும் ஷெ திரு மடத்தில் முழு உரிமையும் உடையவர்களாய் மடத்தைப் பலவகையினுஞ் சீர்திருத்தி நன்முறையில் பரிபாலனஞ் செய்துகொண்டிருந்தார்கள். அச்சுவாமிகளே தமக்குப் பின் தமது ஸ்தானத்தில் அமர்வதற்குத் தக்கவர்கள் என்று முடிவுசெய்து 1969 ஆம் ஆண்டில் உயில் எழுதி வைத்தார்கள்.

சீவன் முக்தர்கள் சிறப்பு

ஸ்ரீ வியாச முனிவர் முதலானவர்களைப்போலச் சாபானுக்கிரக வலிமை எவனுக்குண்டோ அவனே தத்துவ ஞானியல்லாமல் வேறொருவனுகான் எனின் அவ்வலிமை தவத்தின் பயனேயல்லால் தத்துவ ஞானத்தின் பயு

னன்று; அன்றியும், தத்துவ ஞானத்திற்குத் தவமே மூலமென்னும் சுருதியிருத்தலால் தவமற்றவனுக்குத் தத்துவ ஞானமேதெனின் சாபாதிகளுக்குக் காரணம் காமிய தவமென்றும் நிஷ்காமிய தவத்தினுல் தத்துவ ஞானம் உண்டாம் என்றும் அறிக. ஸ்ரீ வியாசர் முதலான முனிவர்களுக்குத் தத்துவ ஞானம் சாபாதி சாமர்த்தியம் இரண்டும் இருத்தல் என்னெனின் அவர்கட்கு இரு வகைத் தவமும் இருத்தலால் ஞானம், சாபசாமர்த்தியம் என்னும் இருவகைப் பயனுமுண்டு. ஒவ்வொன்றை ஆசரித்தவனுக்கு ஒவ்வொன்றே சித்திக்கும். அதனுல் விரோதமில்லை. சாபாதி சாமர்த்தியமின்றி விதிசூந்யனுன தத்துவ ஞானியை கிரியா நிஷ்டர்களெல்லாரும் நிந்திக்கிருர்களேயெனின்; கிரியா நிஷ்டர்களையும் காமத்தில் அழுந்திய மூடர்கள் நிந்திக்கிருர்கள். அந்நிந்தையால் அவர்கட்கு எத்தகைய குறைவுமில்லை. விஷயப் பற்றுடையோரது நிந்தையால் கிரியா நிஷ்டருக்குத் தொல்லையில்லாததைப் போலத் தேகாத்மபுத்தியுள்ள கிரியாநிஷ்டர் செய்யும் நிந்தையால் தத்துவஞானிக்கு யாதொரு கெடுதியும் இல்லை.

சீவன் முக்தன் இலெளகீகனுதலால் பழவினைப் பயனுல் அறிவுடைமை அறிவின்மையாகிய அவஸ்தைகளிருந்தாலும் வாயு வசத்தால் சிதறியும் சிதருமலுமிருக்கும் மேகபடலமுள்ள ஆகாயத்தைப் போல நித்ய நிர்மலனுவான். மற்றும் அதிர்ஷ்ட மென்னும் பரிசாரகனுல் புஷ்பசந்தனுதி போகங்களைக் கிரகித்தும் தன் கணவனிடமே பற்றுள்ள பெண்ணைப் போலச் சொருபத்தில் இரமித்திருப்பன். மூடனைப்போலக் கலாஞானத்துள் மௌனியாயிருந்தாலும் கற்பித்தது வைத பரமான சுருதி வாக்கியமாகிய வைகரி விஷயத்தில் ஆலசியனுவன்.

மற்றும் பிரஸ்துதமறியாத வெகுபாஷிதனைப்போல என்ன பேசினுலுங்கூட அபிப்பிராயத்தை யடக்கிய சத்தியாத்து வைத நிஷ்ட நிகமாபிப்பிராயமாகும். மற்றும் ஆசாரி யனைப்போலச் சீடர்கட்கு உபதேசித்தாலும் ஆத்மா நித்ய முக்தனுதலால் போத்திய போதகத்துவங்கள் மாயா சிருட்டி வடிவின வென்று செய்துள்ள நிச்சயத்தால் ஆகாய வாணிபோலக் குருத்துவாபிமானம் இல்லாதவனு யிருப்பன். மற்றும் அறிவில்லாதவனைப் போலப் பேசத் தகாதமொழிகளைப் பேசுபவனுனுலும் துவைதபாவம் (இரண்டென்னும் எண்ணம் ஒழிந்து) ஆத்மாராமனு யிருத்தலின் சுரதசமயத்து அதிகாமரசமுள்ள மிதுன வாக்கியம்போல அநபிதேய (சொல்லுதற்கரிய) விஷய மாகும். மற்றும் கவிசாக்கிர கண்யனைப்போலக் கலக லெனப் பேசினுலும் பூரணைக்கிய சுபாவ நிஷ்டனுவதனுல் விரசிகள் மனம்போல அபிராப்பியாநு சந்தானமாகும். மற்றும் புத்திரவியோகாநுபவமுள்ள கிராமிய சனங்களைப் போலச் சோகஞ் செய்தாலும் சர்வேந்திரியங்களும் பிரஹ்மாம் சங்களென்று ஆலோசனை செய்யாதே கற்பித சாதகாவஸ்தையில் நிக்கிரகித்த (விட்டொழித்த) சர்வேந் திரிய தர்ம விஷயமான கருணுரசமாகும். மற்றும் விவித வெகுரூப தரிசன விநோதத்துள் அட்ட காசஞ்செய் தாலும் விசித்திரபுண்யபாபாதி விவகாரமுஞ் சத்திய மென்று பிரதிபாதிக்கிற மீமாம் சாதி தரிசன விஷயமான பரியாசமாகும். மற்றும் விடனைப்போல் லோலனு யிருந் தாலும் பூரணைக்கிய சுபாவனுவதல்லாமல் நிசாநந்தாநு பவியாவன். மற்றும் சத்துருவைப்போலக் குரோதத்தால் சந்தாபம் (துக்கம்) செய்தாலும் க்ஷேத்திரதனுக்கினி போல விசிஷ்ட பல சம்பத்துக்கு ஆசிரயஞ்செய்வனென்று விசுவாசஞ் செய்யவேண்டும்.

**விதேக கைவல்லிய மடையும் கிரமம்**

மேல் எக்காலத்திலும் எத்தேசத்திலும் யாதொரு சரீரமும் அடையாமல் சச்சிதாநந்தப் பிரஹ்ம சொரூபத்தி லிருப்பதே விதேக கைவல்லியமாம். அவ்விதேக கைவல்லியமடையும் முறைமையாவது மோட்ச இச்சை யுடைய ஒருவனுக்கு நித்திய கர்மாநுஷ்டானத்தால் தர்மோற்பத்தியும் தர்மோற்பத்தியால் பாபக்ஷயமும் (பாவநீக்கமும்) பாபக்ஷயத்தால் சித்த சுத்தியும் சித்த சுத்தியால் சமுசாரதோஷ தரிசனமும் சமுசாரதோஷ தரிசனத்தால் விஷய விரக்தியும் விஷய விரக்தியால் மோக்ஷா பேக்ஷையும் (வீடுபேற்றில் விருப்பமும்) மோக்ஷா பேக்ஷையால் பாகிய க்ரம பரித்தியாகமும் பாகிய கர்ம பரித்தியாகத்தால் யோகாப்பியாசமும் யோகாப்பியாசத்தால் பிரத்யகாத்மப் பிரீதியும் பிரத்திய காத்மப் பிரீதியால் தவத்துவமசி வாக்கிய விசாரமும், தத்துவமசி வாக்கிய விசாரத்தால் அத்வைத ஞானமும் அத்வைதஞானத்தால், அவித்யா நாசமும் அவித்யா நாசத்தால் துவைதப் பிராந்திநஷ்டமும் துவைதப் பிராந்திநஷ்டத்தால் சுகதுக்கப் பரித்தியாகமும் சுக துக்கப் பரித்தியாகத்தால் இராகத் துவேஷஹானியும், இராகத்துவேஷஹானியால் விதிநிஷேத நிரசன (நீக்க) மும் விதிநிஷேத நிரசனத்தால் புண்ணிய பாபக்ஷயமும் புண்ணிய பாபக்ஷயத்தால் தேகாபாவசித்தியும் தேகா பாவசித்தியால் சாபவிமோசனமும் உண்டாம். சர்வ பாபவிமோசனத்தால் சர்வோத் கிருஷ்டமான, பரம ஸ்தானமும் புநராவருத்திரகிரதமும் (மீட்சியின்றியதும்) சகல சாஸ்திர முடிவாய் நாமசாதிக் கிரியா வாசனைகள் புகாததும் மனோவாக்குக்கட்கு எட்டாததுமான நித்தியா நந்த சொரூபமாயிருத்தலாகிய விதேககைவல்லியம்

உண்டாம். இதுவே சகல சாஸ்திரார்த்த நிர்ணயம் மனித தேகத்தையெடுத்த ஒவ்வொருவரும் ஞானநூல் விசாரஞ் செய்து விதேககைவல்லிய மடைவதற்கு வழி தேடவேண்டியது இன்றியமையாததாம்.

விதேக கைவல்லியமடைதல்

சாதாரண ஆண்டு மாசித்திங்கள் நான்காம் நாள் மங்களவாரமும் சஷ்டிதிதியும் சுவாதி நட்சத்திரமுங்கூடிய நன்னுளில் நம் குருநாதரவர்கள் வழக்கம்போல் நீராடல் செய்து தம் குருமூர்த்தியாகிய ஸ்ரீலஸ்ரீ அண்ணுமலை ஞானதேசிக சுவாமிகளின் சமாதியில் சிறப்பாக அபிடேகஞ் செய்வித்துத் தம்முடைய திருவாக்கினுலேயே அஷ்டோத்திர நாமங்கூறி அர்ச்சனை செய்யச்செய்து தீபாராதனையுந் தெரிசித்தார்கள். பகல் பன்னிரண்டு மணிக்கு அடியவர்களோடு பந்தியில் அமர்ந்து உணவு கொண்டார்கள். பிறகு பிரமசபையில் இரண்டு மணி வரை சுய நினைவோடு எல்லோருடனும் உரையாடிக் கொண்டிருந்தார்கள். பிறகு தமது சொரூப நாட்டத்தில் மௌனமாக இருந்து மாலை ஆறுமணி அளவுக்கு மநோ வாக்குக்களுக்கெட்டாத நித்தியாநந்த சொரூபமான விதேககைவல்லியத்தை யடைந்தார்கள்.

சமாதி வைத்தல்

மறுநாள் பல சாதுக்களும் ஆயிரக்கணக்கான நகரத்தார்களுங் கூடியிருக்க நம் குருநாதருடைய திருமேனிக்கு மகாபிடேகஞ் செய்யப்பெற்றுப் பலவகையான பட்டுக்களாலும் மலர்மாலைகளாலும் திருமேனி அலங்கரிக்கப் பெற்றது. அழகிய புஷ்பவிமானம் அமைத்து அதில் திருமேனியை வைத்து மேளதாளங்களோடு ஊர்வலமாக

எடுத்துச் செல்லப்பெற்றது. அடியவர் திருக்கூட்டம் பசனை செய்துகொண்டு சூழ்ந்து சென்றது. தவமே திருவுருக்கொண்டெழுந்தருளியது போன்று ஒன்பதாவது பட்டத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ இராமநாத ஞான தேசிக சுவாமிகள், திருவாரூர் ஸ்ரீ குரு தட்சணா மூர்த்திமடம் சுவாமிகளாகிய ஸ்ரீலஸ்ரீ சண்முகாநந்த சுவாமிகள், கோவிலூர் மடம் பரம்பரை மடாதிபதிகள் ஆகியோர்களும் தேவகோட்டை சமீன்தார் திரு. அழ. அரு. சோமநாதன் செட்டியார் முதலிய நகரப்பிரமுகர் களும், ஆயிரக்கணக்கான பக்தகோடிகளும் சூழ்ந்திருக்க, முந்திய மடாதிபதிகளாகிய ஸ்ரீ மகாதேவ ஞான தேசிக சுவாமிகள் முதலிய சமாதியாலயங்களைத் தொடர்ந்து அழகிய குகையில் சமாதி செய்யப்பட்டது.

## பின் நிகழ்ச்சி

ஒன்பதாவது பட்டத்தில் எழுந்தருளியுள்ள சுவாமி களவர்களால் பத்தாம் நாள் மோட்சதீபம் மிகுந்த சிறப் புடன் நடத்தப்பெற்றது. திருநெல்லையம்பாள் சமேத இராசகட்க பரமேசுரருக்குச் சிறப்பான பூசைகள் நடை பெற்றன. அந்தணர்கட்கு அறுசுவையுண்டி அளிக்கப் பெற்றது. அடியவர்கட்கு மகேசுவர பூசை சிறப்பாக நடைபெற்றதோடு வஸ்திர தானமுஞ் சொன்னதானமும் செய்யப்பட்டது. ஏழை எளியவர்கட்கும் நகரத்தார் கட்கும் நன்முறையில் உணவு அளிக்கப்பெற்றது. ஒன்ப தாவதுபட்டத்துச் சுவாமிகளவர்கள் மோட்சதீப விழாவை மிகச் சிறப்பாக நடைபெறச் செய்தது அனைவருக்கும் மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. இப்பொழுது பட்டத்தில் எழுந்தருளியுள்ள மகா சந்நிதானமவர்கள் கோவிலூர் மடாலயத்தில் பலவகையான வசதிகளுஞ் செய்து மடால

யத்தைக் கைலாசம்போல் மிளிரச் செய்யப் பலவகையிலும் முயன்று வருகிருர்கள். ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளுடைய ஆட்சியில் மடாலயம் பல நூதனமான வசதிகளைப் பெற்றுச் சிறப்புற்று விளங்குமென்பதற்கு ஐயமில்லை. நம் குருஸ்தானம் எஞ்ஞான்றும் நீடூழி வாழ்வதாக.

சுபம்.

ஓம் தத் ஸத்.

---

கோவிலூர் மடம் மகா சன்னிதானம்

## ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரஞானதேசிக சுவாமி களவர்களை

ஸ்ரீமத் ஜகத்குரு சங்கராசார்ய மஹா சம்ஸ்தான
சிருங்கேரி ஸ்ரீலஸ்ரீ அபிநவ வித்தியா தீர்த்த
பாரதீ யதீந்திர சுவாமிகளவர்கள் ஆசீர்வதித்த

## ஆசீர்வாத ரத்தினம்

இஃது
திருவண்ணமலை ஈசானியமடம்
ஸ்ரீலஸ்ரீ நடேசஞானதேசிகசுவாமிகளவர்களால்
மொழிபெயர்க்கப்பட்டது.

---

கோவிலூர் மடத்தி னதிபராய் விரும்பிக்
குறைவறத் தமதற மனைத்தும்
ஒவில்சீர் ஞான குருபரன் ருளி
லுலப்பிலா நிறைந்தவன் பினராய்
மேவிய சோம சுந்தர ஞான
விமலதே சிகர்க்கருள் புரிக
தாவில்பே ராயு ளுடன்பெருஞ் செல்வஞ்
சந்திர மௌலியீ சுரரே.

குறிப்பு :—தமதறமனைத்தும் குறைவறவிரும்பி என்றும் சந்திர மௌலியீசுரர்தாவில் பேராயுளுடன் பெருஞ் செல்வ மருள் புரிக என்றும் அந்வயஞ்செய்க.
செல்வம்=அருட்செல்வம், பொருட்செல்வம்.

---

எல்லோரும் இன்புற்று வாழ்க.
சர்வஞ்சிந்மயம்.

காரைக்குடி கோவிலூர் மடம் மாணவர்

ஸ்ரீமகா சோமசுந்தர ஐயா அவர்கள்

இயற்றிய

இருபத்துநான்கு சீர்ச்

# சரித்திர ஆசிரிய விருத்தம்

செப்புகலி நாலாயி ரத்துத் தொளாயிரஞ்
சேர்ந்துவரு தொண்ணூற்றினிற்
திகழ்வருட மாகிய விரோதிமதி மாசியிற்
றேதியொரு முப்பததனிற்
றிதிசஷ்டி யனுடநட் சத்திரமும் வாய்ந்துவரு
திவ்யசுப காலமதனிற்
செந்திரு நடம்புரியு(ம்) நகரதன வைசிய
சிகாமணி யெனப்பிறந்தோன்

முப்புவன மும்பரவு கோவிலூர் ஞானவிறை
முதன்முத்து ராமலிங்க
மூர்த்தியொளிர் பீடத்தி லெட்டாவ தானகுரு
மூர்த்தமாய் விற்றிருந்தோன்
மூதறிஞ ரண்ணு மலைப்பரன் மகாதேவ
முதுகுரவ ரிருவர்பாலும்
முந்தையுள வேதாந்த நுண்பொருளை யையமற
முழுவது முணர்ந்தவறிவோன்

எப்பெரிய வுலகவிவ காரங்க ளெய்துகினும்
இறைபக்தி குருபக்திதாம்
எட்டுணையு(ம்) நியமங்க டவறுது செய்துவந்
திறுதிவரை நின்றபெருமான்

இசைபெருகு தில்லையிற் பொன்னம்ப லாசிரியர்
எழின்மடத் ததிபதியுமாய்
இனிதிருந் தீரிடமு மன்பர்கட் கத்துவித
வின்பநிலை யருள்புரிந்தோன்

ஒப்பரிய சோமசுந் தரதேசி கன்றனக்
குற்றவய தானவெண்பத்
தொருவருட முடலொடு மிருந்துசா தாரணத்
துயர்மாசி தேதிநான்கில்
ஒத்தமங் களவார மெய்திய சுவாதியன்
றுலகினை மறந்தநிலையாய்
உரைமனு தீதபர சச்சிதா னந்தசிவ
வுருவமா யிலகினனரோ!

---

# ஸ்ரீ சோமசுந்தர குருஸ்துதி

## ஸ்ரீமத் சோம. இராமலிங்க சுவாமிகள் அவர்கள் பாடியன

காப்பு குறள்வெண்பா

நம்பியடைந் தோர்க்கருள்செய் நங்குருவைப் [போற்றிசெயத்
தும்பிமுகன் தாளே துணை.

நேரிசை வெண்பா

செழுந்தரணி தன்னில் செனித்தஅடி யேற்குன்
செழுந்தாள் அளித்தாளச் சீராய்—எழுந்தருவி
வந்தருளும் என்குருநின் மாமலர்த்தாள் போற்றிசெய்து
வந்தனைகள் செய்தேன் மகிழ்ந்து. (1)

தேனுறு பாயுந் திருக்கோவி லூரதனில்
வானுடர் கோவும் வணங்கிடவே—கோனன
முத்துராம லிங்கர் முதல்மடத்து நல்தலைவ!
நத்தினேன் உன்னடியை நன்கு. (2)

பாதகஞ் செய்துழலும் பாவியேன் ஓர்பொருளாய்
நாத நலந்திகழ நான்மறையின்—போதமருள்
சோமப்பேர் சுந்தரனே தோத்திரித்தேன் நின்றுனை
ஏமப் பதமருள்வாய் இங்கு. (3)

முத்தனே! முத்திரா மேச மடத்தரசே!
அத்தனே ஆண்டாய் அடியேனை—இத்தரையில்
தத்துவத்தை யோதிமிகத் தந்திட்டாய் மோட்சத்தைச்
சுத்தனே! நீயே துணை. (4)

மேதினியில் நன்ஞானம் மேவிடவே சந்யாசம்
ஏதி லடியேற்கும் ஈந்தருளி—ஆதியென
நின்றருளுஞ் சோமப்பேர் நீளவரு சுந்தரனே
என்றனக்கே தாள்தருவாய் இன்று. **(5)**

புன்புலால் ஆகம் பொருளாக எண்ணியே
வன்பிறவிக் காட்டில் வாடினேன்—என்பிறவி
நீங்கிடவே நீபிரமம் என்றுரைத்த நின்மலனே
பாங்காருன் தாள்பணிந்தேன் பார். **(6)**

தன்னடிமை பூண்ட தமியேனும் உய்ந்திடவே
தன்னையே தந்தாய் சரண்பற்றி—நின்னையே
போற்றினேன் சோமப்பேர்ப் புண்ணியனே நின்குளை
மாற்றினேன் வன்பிறவி மால். **(7)**

பொன்னுட் டவர்போற்றும் பொன்னம் பலவாணர்
தன்னுடாந் தில்லைத் தனிப்பதியில்—மின்னுடும்
பொன்னம் பலசாமி போற்றுமுயர் நன்மடத்தில்
முன்னம் பெருங்குருவாம் மூண்டு. **(8)**

நின்வடிவம் மாபிரமம் நீயதுவே நன்காவாய்
உன்னிடுவாய் உள்ளத்தில் ஓமெனவே—முன்னிடுவாய்
என்றெனக்கு நல்லருள்செய் என்குருநின் தாள்போற்றி
ஒன்றையுற்றேன் சீடன் உவந்து. **(9)**

பஞ்சகோ சம்நானுய்ப் பாவித்தேன் பன்னெடுநாள்
தஞ்சமென்று நின்அருள் தனையடைய—எஞ்சலிலா
மாபிரம மாக்கியென்னை மாநிலத்தில் ஆண்டிட்டாய்
ஆபிரம சுந்தரநீ ஆங்கு. **(10)**

சற்குருவே துணை

---

கோவிலூர் ஸ்ரீ சோமசுந்தர ஞானதேசிக
சுவாமிகள்

# தோத்திரப் பன்மணி மாலை

கருப்பக்கிளர் திரு. சு. அ. இராமசாமிப்புலவர்
அவர்கள் இயற்றியது

காப்பு

மதியழகன் புகழ்பாட மாண்பார் சித்திபுத்தி
பதியாம் விநாயகன்றன் பாதம் பணிந்திடு வாம்.

*நூல்*

அகவற்பா

திருவளர் பாண்டித் திருநா டதனில்
பெருவள மோங்கிப் பிடுசால் பதியாம்
பள்ளத் தூரெனப் பகர்ந்திடு மூரில்
உள்ளத் துறவுடன் உதித்தருள் சோம
சுந்தர னடியைச் சிந்தையில் வைப்பாம். (க)

இதுவுமது

காமவெந் துயரிற் கலங்கியே சுழன்று
நாமவெம் பிறவி நானிலத் துருமல்
சேமமார் உன்றன் சேவடி தருவாய்
சோமசுந் தரனுந் தூயசற் குருவே. (உ)

### ஒருவிகற்ப நேரிசை வெண்பா

இந்து முடித்தருளும் எந்தை திருச்சோம
சுந்தரனின் பேர்கொள்ளுஞ் சோமப்பேர்—சுந்தரனே!
இந்தத் தரணிதனில் இன்னும் பிறவாமல்
தந்தருள்வாய் நின்றுளைத் தான். (௩)

### இருவிகற்ப நேரிசை வெண்பா

கோயிலூர் மாமடத்தில் கூறுபுகழ்ச் சற்குருவாய்
மேய புகழாரும் வித்தகனே!—தாயினுநல்
தண்ணருள்சேர் எம்மிறைவா தந்தருள்வாய் நின்றுளை
மண்ணின் மிசைப்பிறவா மல். (௪)

### கட்டளைக் கலித்துறை

சீரார் திருத்தில்லை சேர்மடந் தன்னுடன் செய்யநல
பேரார் மடங்கள் பிறபல வற்றிற்கும் பேசருநல்
ஏரார் தலைவன் எனவிருந் தோங்கி எழிலருள்செய்
காரார் அருளுடைச் சுந்தர தந்தாள் கழலிணையே. (ரு)

### கலிநிலைத்துறை

உள்ளத் துறுபல தொல்லைகள் யாவும் ஒழிந்திடவே
வெள்ளத் திருவருள் விரைந்துசெய் சோம வித்தகன்றுள்
கள்ளத் தனமறக் கருத்தினி லிருத்தியிக் காசினியில்
தெள்ளத் தெளிந்த பரஞான செலவத்தைச் சேர்குவமே. (சு)

### கலிவிருத்தம்

மதியணி செஞ்சடை வான வன்பெயர்
துதிகொளக் கொண்டருள் சோம சுந்தரப்
பதியவன் திருவடி பற்றி னோர்கடாம்
கதிபெற லுண்மையாங் கழற லுண்மையே. (எ)

## இதுவுமது

பொங்கிய புகழ்மிகு பூமி தன்னிலே
நங்குரு நாதனுய் நவில வந்தருள்
துங்கனுஞ் சோமசுந் தரனைப் போற்றியே
பங்கமார் பவப்பிணி பாற்று வாமரோ. (அ)

## அறுசீராசிரிய விருத்தம்



சீர்திகழுங் கோயிலூர்த் திருமடத்தின்
சற்குருவாய்த் திகழ்ந்து நின்று
பேர்திகழும் பெருஞானச் செல்வத்தைத்
தமையடைந்த பெற்றி மிக்க
ஏர்திகழ்நல் லடியவர்கட் கினிதருளும்
எந்தையென இலங்கி நின்ற
தார்திகழுஞ் சோமசுந் தரனடியை
எக்காலுந் தழுவி வாழ்வாம். (கூ)

## எண்சீராசிரிய விருத்தம்

நான்மறையின் முடிவாக நவிலு கின்ற
நன்மறையா நான்குமகா வாக்கி யத்தின்
மேன்மைமிகு பொருளதனை விரித்து நாளும்
மேதகுநற் சீடர்கட்கு விழைந்து நல்கும்
பான்மைதிகழ் குருபரனும் பாரில் நல்ல
பண்புமிகு *மதியழகன் தனது பாதம்
தேன்மலர்கொண் டருச்சிக்கும் சீர்மை மிக்கோர்
சேர்ந்திடுவர் நற்கதியைச் சிறப்பின் மாதோ. (௧௦)

*மதி – சோமன்; அழகன் - சுந்தரன்.

## இதுவுமது

மேதகுநல் லறிவதுவே பிரம மென்றும்
விளங்குறுமப் பிரமமது நீயே என்றும்
சாதகராஞ் சீடர்கட்குச் சாற்றி நாளும்
தத்வமசி உபதேசந் தருதல் செய்யும்
போதகனுஞ் சோமசுந் தரப்பேர் பெற்ற
புங்கவன்றன் நற்குலைப் போற்று வோர்கள்
பாதகங்கள் தமையொழித்துப் பாரில் என்றும்
பரப்பிரம் வடிவாகும் பயன்கொள் வாரே. (கக)

## இதுவுமது

தத்துவநன் ஞானத்தைத் தருதல் செய்யும்
தனிப்பெருநல் நூல்களெனச் சாற்ற நின்று
நத்துதல்செய் நூல்களாம் நாநா சீவ
நன்மைமிகு கட்டளையே ஆதி யாகச்
சத்துச்சித் தாநந்த வடிவு காட்டும்
தன்மைமிகு வாசிட்டம் அந்த மாகப்
புத்தியுள சீடர்கட்குப் புகட்டி நின்ற
புங்கவனுஞ் சோமசுந் தரனே போற்றி. (கஉ)

குருவே துணை

ஓம் தத் ஸத்





அப்பர் அச்சகம், சென்னை-1.